www.tamilarangam.net

நாடக நூல் வரிசை



# பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு

கரு.அழ.குணசேகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# பவளக்கொடி

அல்லது

# குடும்பவழக்கு

கரு. அழ. குணசேகரன்

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

அடையாளம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Price : **I Rs. 30**

**PAVALAKKODI ALLADHU KUDUMBA VAZHAKKU (Tamil)**

Drama ○ Author : K.A. Gunasekaran ○ © K.A. Gunasekaran ○ First Edition : May 2001 ○ Pages : 68 ○ Typeset by : Safa Graphics, Madurai 20. Ph. : 0452 522743 ○ Published by : ADAIYALAM, H 15/193, II Floor, Karupur Rd., Puthanatham 621 310. Ph. 04332 73444, e mail : adaiyalam@yahoo.com ○ Sole Distributors in Sri Lanka : MOONDRAVATHU MANITHAN, 37/14, Vauxhall Lane, Colombo 2. Ph. 302759, email : 3man@sltnet.lk ○ Cover Photo : Thankarpachan ○ Cover Design : Sasi & Sasi ○ Printed by : Multi Craft, Chennai 4.

ISBN 81 7720 004 6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அய்யா, நாங்களும் இத்தனை வருசமா
நிறைய்ய நாடகங்கள் நடத்தியிருக்கோம்;
நாடகவாத்தியார்களைப் பார்த்திருக்கோம்.
எங்க கதையையே நாடகமாக்கி,
எங்களையே நடிக்கவும் வச்ச
உங்களை மறக்க முடியா துங்க
என்று அடிக்கடிச் சொல்லி வணங்கும்
அந்த 60 வயது மதிக்கத்தக்க,
அல்லி ராணி வேசமிட்டு நடித்து
இன்று மறைவெய்தியுள்ள
அம்மையார் கி. அம்சா
அவர்களுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னுரை

சின்ன வயதில் நாடகம் பார்க்க என் அப்பா என்னை அழைத்துச் செல்வார். மதுரை சிவகங்கைப் பகுதிகளில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் கிராமங்கள் தோறும் நடைபெறு வதைக் காண சுற்றுவட்டார மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். பல்வேறு ஊர்களில் நடைபெற்ற நாடகங்களை விமர்சித்துக் கொண்டே செல்வார்கள்.

'பவளக் கொடி அல்லது குடும்ப வழக்கு' எனும் இந்த நாடகம் ஒன்று புராணக்கதையாகச் செல்ல மற்றொன்று குடும்பக் கதையாக விலகிச் செல்லும் முறையில் நான் எழுதியிருப்பதற்கு மேற் சொன்ன எனது அனுபவம் ஒரு காரணமாக இருக்கக்கூடும் என எண்ணுகிறேன்.

நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளான கரகாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், ராசாராணி ஆட்டம் போன்ற ஆட்டங்களில் பெண்கலைஞர்கள் பலர் சக ஆண் கலைஞர்களின் இரண்டாம் தாரங்களாக ஆகிவிடுவதையும், சில நேரங்களில் கணவனால் கைவிடப்படுபவதையும் உள்ளமையை என் கள அனுபவங்களில் கண்டுள்ளேன்.

இந்நிலையைப் பாட்டுக் கச்சேரிகளில் குறிப்பாக, சினிமாப் பாட்டுக் கச்சேரிகளில் பாடும் பெண் தொழிற்கலைஞர்கள் பலரும் அனுபவிக்கின்றனர். நாடகக் கம்பெனிகள் பலவற்றிலும் இந்நிலை காணப்படுகின்றது. பெண்கள் பாலியல் கொடுமை களுக்கு உள்ளாக்கப் படுவதைப் பத்திரிகைகளில் தினமும் படித்து அறிகிறோம். சினிமாவிலும் இந்நிலை உள்ளமையை உணர முடிகிறது. கலை உலகில் பங்கெடுக்கும் பெண் கலைஞர்களின் அவஸ்தைகளைப் பல தளங்களில் உணர்ந்து வரும் சூழலில்தான் நமது புராண இதிகாசங்களில் பெண் பாத்திரங்களின் வாழ்க்கையும் அமைந்துள்ளதை உணர முடிந்தது.

நான் எழுதிய வள்ளி திருமணம் நாடகத்தில் முருகன் இருதாரங்களைக் கொண்டதை விமர்சித்து எழுதினேன். அடுத்து நான் எழுதியுள்ள 'சத்திய சோதனை' எனும் நாடகத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரிச்சந்திரன் தன் கொள்கையை நிலை நாட்ட தன் மனைவியான சந்திரமதியை விற்றமையை விமர்சித்து எழுதினேன். இந்த நாடகத்தில் அர்ச்சுனன் ஆறு பெண்களைத் தொடர்ந்து தன் மனைவியாக்கிக் கொள்வதையும், இதற்குக் கிருஷ்ணன் துணை போவதையும் விமர்சித்து எழுதியுள்ளேன். பெண்களே முழுதும் பங்கேற்றால் அவர்களது சொந்தப் பிரச்சினைகளையும் சேர்த்தே பேசிட வாய்ப்புண்டு என எண்ணியதால் புராண காலத்தையும், சமகாலத்தையும் பக்கம் பக்கமாக வைத்து நிகழ்காலத்துப் பிரச்சினைகளை மிகவும் அழுத்தப்படுத்தி நாடகம் எழுதினேன். பவளக்கொடி நாடகத்தில் சங்கரதாஸ் சுவாமிகள் சமய அழுத்தம் கொடுத்துக் கடவுள் பாத்திரங்களாகவே உணர்ந்து படைத் திருப்பதை நிகழ்காலப் பார்வையில் வாசிக்கும் போது எரிச்சலை ஏற்படுத்தியது. இதனை மறுவாசிப்புச் செய்து வேறு ஒரு நாடகப்பிரதியாக்கம் செய்ய முதலில் முடிவெடுத்தேன். பிறகு அம்முடிவை மாற்றினேன்.

சாமியின் பெயரால் இங்கு எல்லாமே நியாயப் படுத்தப்படும் போக்கு இருப்பதனால் நாம் எழுதும் நாடகப் பிரதி கவனிப்புக்கு உள்ளாகாமல் போய்விடும் என்பதால் பவளக்கொடி நாடகத்துக் குள்ளேயே இன்னொரு நாடகத்தைத் 'தைத்து' விடுவது எனக்கருதி ஒருகாட்சி புராண நாடகக் கதைப்பகுதி, அடுத்தக் காட்சி அதில் நடிக்கும் பெண்கலைஞர்களின் வாழ்வியல் பிரச்சினைப் பகுதி என்றவாறு ஒருநாடகப் பிரதிக்குள் புராணகாலம், நிகழ்காலம் எனும் இருகாலங்களை அருகருகே அமைத்தேன்.

'பெண்ணிய நாடகம்' இன்று தமிழ்ச்சூழலில், சென்னையில் பரவலாகச் செய்யப்படுகின்றது. உயர்சாதிப்பெண்கள் பெண்ணிய நாடகங்களில் அதிகம் அக்கறை காட்டி வருகின்றனர். உயர்சாதிப் பெண் நாடகக் காரர்களின் பார்வையில் பரம்பரை பரம்பரையாக நாடகமாடி வரும் பெண் நாடகக் கலைஞர்களின் வாழ்வியல் கண்டு கொள்ளப் படாமல் போனதில் வியப்பேதுமில்லை. இந்தச் சூழலில்தான் இப்பெண் நாடகக் கலைஞர்களை நான் சந்தித்த போது அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை நிறையக் கேட்டறிந்தேன். பெண் நாடகக் கலைஞர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் என்னை மிகவும் சங்கடப்படுத்தின. என் மனைவியிடம் இவைகளைப் பகிர்ந்தேன். இதையும் சேர்த்தே நாடகம் செய்யுங்களேன் என்று கூறிய கூற்றை மனம் பதித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓரிருநாட்கள் மனதில் அசைபோட்டேன். ஒவ்வொரு காட்சியையும் எழுதிமுடித்த உடனே என் மனைவியிடம் படித்துக்காட்டினேன். இப்படியாக இருநாட்களில் இந்தநாடகம் எழுதி முடிக்கப்பட்டது.

மௌனக்குரல் எனும் நாடகக்குழு பேராசிரியர் சே. இராமானுஜம் அவர்களைக் கொண்டு ஒரு நாடகம் இயக்கச் செய்து மேடை கண்டதன் தொடர்ச்சியாக, என்னை ஒரு நாடகம் இயக்கம் செய்துதர அழைத்திருந்தது. இசை நாடகமாக அது அமைய வேண்டுமென்றும் அதனை எழுத மதுரை தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் நடிகர் சங்கத்தைச் சார்ந்த வரதராஜன் ஆர்மோனியக்காரர் இருந்தால் நன்று என்றும் கூறினார். அவர் பவளக்கொடி நாடகத்தையே சுருக்கி எழுதித் தந்தால் அதற்குரிய மதிப்பூதியத்தை வழங்கலாம் என்றும் அவ்வுதவியை நான் முன்னின்று செய்து தருவதாகவும் முடிவு செய்யப்பட்டது. இந்தப் பின்னணியில் இப்பணியை நானே செய்ய முடிவெடுத்தேன். நாடகப்பிரதியை எழுதி முடித்ததும் அதனைப் படித்த அவ்வியக்கத்தினர் இதனையே நெறியாள்கை செய்து தர வேண்டினர். நாடகப்பிரதிக்கென தனி மதிப்பூதியத்தை அவர்கள் அளிக்கவுமில்லை; நான் பெறவுமில்லை.

நாடக அரங்கேற்றம் செய்து முடிக்கப்பெற்றதும் கேரளாவிற்கு இந்நாடகம் செல்லவிருப்பதாக நடிகைகள் வழிஅறிந்தேன். அதுகுறித்து எத்தகவலும் அவர்கள் என்னிடம் சொல்லவில்லை. இந்தச்சூழலில்தான் இந்த நாடகத்தை யாரேனும் மேடையாக்கம் செய்ய விரும்பினால் எனது அனுமதியைப் பெற வேண்டும் என்பதை இங்கு முன்வைக்க வேண்டியுள்ளது.

"கிருஷ்ணன், அர்ச்சுனன் புராண காலத்திலே மட்டுமில்லே இந்தக் காலத்திலேயும் நம்மகூட பேண்ட், சட்டை போட்டுக்கிட்டும், வேட்டி, சட்டை போட்டுக்கிட்டும் கோட்டு, டை கட்டிக்கிட்டும் கடைகள்ல, தெருவிலே, வீட்டிலே, நாட்டிலே, ஒங்களோட, எங்களோட இன்னும் வாழ்ந்து கொண்டிருக்காங்க".

இப்படி முடியும் இந்த நாடகம் பெண்ணிய நாடகமாக வாசிக்கப்பட்டாலும், இன்னொரு பார்வைக்கும் இதில் வாய்ப்புள்ளது. இந்துத்துவக் கடவுள்களுக்கு எதிரான

www.tamilarangam.net

கருத்துக்கள் என்பதே அது. 'தலித் கலை கலாச்சாரம்' எனும் எனது நூல் வெளிவந்த கையோடு இந்நாடகம் எழுதப்பட நேர்ந்ததால், இந்துத்துவக் கடவுள்களின் லீலைகளைப் பெண்ணியப் பார்வையில் வாசிக்கும் வாய்ப்பு இதில் அழுத்தமாக வெளிப்பட்டுள்ளதாக உணர்கிறேன். நமது உயர்சாதிப் பெண்கள் தமிழகத்தில் பெண்ணிய நாடகம் பற்றி அதிகம் பேசிவரும் சூழலில் இந்துத்துவத்தையும், இந்துத்துவக் கடவுள்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களைக் கொண்டிருக்கும் பெண் அடிமைக்கு எதிரான கருத்துக்களையும் முன்வைத்து நாடகம் செய்ய முன்வரவேண்டும் என்பது தேவையாக உள்ளது. சென்னை உயர்சாதிப் பெண்கள் நடத்தும் பெண்ணிய நாடகங்களில் இப்பார்வை முன் வைக்கப்பட்டுப் பல நாடகப் பிரதிகள் வெளிவரவேண்டும் என்பது நமது ஆவல். ஏனெனில் பெண்ணியப் பிரச்சினைகளைப் பெண்களே முன்னின்று நாடகப் பிரதிகள் செய்யும்போது இன்னும் கூடுதல் அழுத்தம் பெறும். இதுபோல தாழ்த்தப்பட்ட பெண்கள் பிரச்சினைகளைப் பேச உயர்சாதிப் பெண்கள் நாடக இயக்கங்கள் முன்வரமாட்டா என்பதையும், அவ்வாறு செய்ய முன்வரினும் அது சரியாக இருக்க முடியாது என்பதையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

'இந்தியா டுடே' இதழ் இந்நாடகப்பிரதியைப் பிரசுரம் செய்தமையால் ஐரோப்பிய நாடுகளிலிருந்தெல்லாம் இது வாசிக்கப்பட்டுப் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. நவீன நாடகம் என்று ஊடகங்களிலும், டெல்லி போன்ற நகரங்களிலும் பேசப்படும் போதெல்லாம், நாடக விழாக்கள் நடைபெறும் போதெல்லாம் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பது போலப் பேசப்பட்ட நாடகங்களும் நாடகக்காரர்களும் தொடர்ந்து பேசப் பட்டுக் கொண்டே இருக்கும் நிலை உள்ளது. புதிய பார்வையுடன் உள்ள நாடகக்காரர்களின் வருகை தான் இந்தப் பழைய போக்கினை மாற்றும். மாறாதது எது? எல்லாம் மாறும். மாற்றத்தில் நமது பங்கும் இருக்கட்டும். இந்த நாடக வாசிப்பினால் புதிய நாடகங்கள் வரத் தொடங்குமானால் புதிய நாடக இயக்கங்கள் அடித்தள மக்கள் நாடக அரங்கு என்றும், தலித் அரங்கியல் என்றும் புதிது புதிதாக வரவேண்டும். அதை நாம்தான் நிகழ்த்திட வேண்டும்.

பாண்டிச்சேரி
மார்ச் 21, 2001

கரு. அழ. குணசேகரன்

www.tamilarangam.net

# பவளக்கொடி

அல்லது

# குடும்பவழக்கு

www.tamilarangam.net

www.tamilarangam.net

மேல்தளம், கீழ்த்தளம் என மேடைகள் இருமேடைகளாக அமைந்துள்ளன. ஒரு மேடைக்காட்சி நடைபெறும் போது மறு மேடைக் காட்சி தெரியாத வண்ணம் ஒளியில் அல்லது திரையில் கவனம் செலுத்த வேண்டும்.

**(அரங்கில் ஒளி பரவுகிறது)**

நாடகம் நடக்க உள்ள மேடை. பார்வையாளர்கள் நாடகம் எப்போது தொடங்கும் எனும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து உள்ளனர்.

**ஒருவர் :** (மேடையிலுள்ள ஒலிபெருக்கியைச் சரி செய்துவிட்டு) செய்யாறு நாடக நடிகர் சங்கத்திலிருந்து வந்துள்ள நாடகக்குழு உடை, ஒப்பனை செய்து முடித்துவிட்டனர். இன்னும் ஒருசில நிமிடங்களில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளும் டாக்டர் கே.ஏ. குணசேகரன் அவர்களும் சேர்ந்து எழுதியுள்ள பவளக் கொடி அல்லது குடும்ப வழக்கு எனும் நாடகத்தை நடத்த உள்ளனர். சைலன்ஸ்! அமைதி காத்தருளும்படி ஊர்ப் பெரியோர்கள் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உடை ஒப்பனை அறைக்காட்சி - 1

மேடையில் உடை ஒப்பனை அறை காட்சியளிக்கிறது. பொருட்கள், ட்ரங்க் பெட்டிகள், துணிமணிகள், போன்றவை உள்ளன. உடை, ஒப்பனை செய்து கொண்டுள்ளனர். கலைஞர்கள்.

**ஆர்மோனியக்காரர் :** ஏய்யா! தொழில் பண்ண வந்த இடத்திலே இப்படியா தகராறு பண்றது. உங்க குடும்ப விசயத்தை ஊர்ல நாலுபேர் வச்சுப்பேசித் தீர்த்திக்கிருங்க. ஊரே கூடியிருக்கு. நாடகம் எப்ப நடத்துவாங்கன்னு காத்துக் கிட்டுருக்காங்க. கொஞ்சநேரம் ஆச்சுன்னாக் கல்லெடுத்து எறிஞ்சிடுவாங்க.

**(நாடகத்)தரகர் :** யோவ் எங்க குடும்ப விசயம். இதிலே நீங்க தலையிடாதீங்க. இவ எவ்வளவு திமிர் கொண்டவள்னு எனக்குத் தெரியும். நானும் எத்தனை நாளாகக் கேக்கிறேன் ஒண்ணுக்கும் ஒத்துவரமாட்டேங்கிறாள். பல ஊரு கண்டவ...

**அல்லி (வேடம் பூண்டவள் - நாடகத்தரகரின் மனைவி) :** யோவ்! நாக்கப்புடிச்சு அறுத்திடுவேன். யாரப்பாத்து பல ஊருகண்ட வள்னு பேசுற. நீதான் ஊரு ஊருக்குப் பொண்டாட்டி வச்சிருக்கே. இப்ப எந்தங்கச்சியப் பொண்டாட்டியாக் கணும்னு எங்கிட்டே சம்மதம் கேக்குறே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரகர் : அடியே செண்பகம்! என்னடி வாய் நீளுது. என்னப்பத்தித் தெரியும்ல (அருகில் நெருங்கி தலைமயிரைப் பிடித்து) அல்லிராணி வேசம் போட்ட நெனப்பா... அல்லிராஜ்யம் மேடையிலேதான். வீட்ல வச்சுக்கிட்டே, மவளே அரிவா வெட்டுத்தான்; கொடல் சரிஞ்சிடும் டீ.

கோமாளி : யோவ்! ஒனக்கு அறிவு இருக்கா. வேசங் கட்டியிருக்கிற பொம்பளையப் போயி தலைமயிரப் புடிக்கிற தலை மயிரவிடுய்யா. டோப்பா என்ன ஆகும்?

தரகர் : ஒய்! யாரும் இவள வச்சிருக்காகளா? எம்பொண்டாட்டிய நான் அடிப்பேன், மிதிப்பேன், நீயாரு வந்துகேக்குறதுக்கு.

ஆர்மோனியக்காரர் : யோவ் நிறுத்துய்யா... (கலைஞர்கள் அனைவரும் எழுந்து அமைதிப்படுத்துகின்றனர்)

தாளக்காரர் : (மேளதாளங்களைத் தட்டிக் களை கட்டுகிறார்)

ஆர்மோனியக்காரர் : (பாடல் பாடுகிறார். அனைத்துக் கலைஞர்களும் சேர்ந்து பாடுகின்றனர்)

கல்விக்குரிய கலைவாணி - உன்
கழலடி பணிந்தேன் கருணை செய் பேணி (கல்வி)
செல்வம் உன் அருளன்றி ஜெகத்தினர்க்கேது
திகழும் அறிவில்லார்க்கு உன் நிலை தெரியாது
பல்கலைப் புகழ் மறை பகர் மொழி மாது
பாரதி நீ கடைக் கண் பாரெங்கள் மீது (கல்விக்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தர்பார் காட்சி - 2

**கோமாளி (வருகை) :** சைலன்ஸ் - வணக்கம்

கோமாளி வந்துட்டேன்
கோமாளி வந்துட்டேன்
கூடி இருக்கிற உங்களுக்கெல்லாம்
வணக்கம் தந்திட்டேன்
வாங்க வாங்க உட்காருங்க
வந்த காலில் நிக்காதீங்க
பாதையை விட்டு விலகி - நீங்க
பதறாம பாத்துடுங்க

சைலன்ஸ்! கோமாளி வந்துட்டேன்!

**(வசனம்) :** அதாகப்பட்டது, இன்றைய தினம் பவளக் கொடி அல்லது குடும்ப வழக்கு எனும் நாடகம் நடைபெறப்போகிறது. முதலாக பாண்டிய நாட்டை ஆளக்கூடிய பாண்டியர் குமாரியான பாவை அல்லி ராணி, தர்பார் வரும் விதம் காண்க.

*(அல்லிராணி - சகிகள், சேவகி சகிதம் தர்பாரில் வீற்றிருக்கிறாள்)*

**சகிகள் :** பாண்டியர் குமாரியான பாவையல்லியே பட்டம் பொருந்தி இம் மதுரையையாளும் சௌபாக்ய வல்லியே.

பலப்பல அரசர்கள் பணிவோடு தருகிற பகுதிகள் பெரும் அல்லியே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**(வசனம்) :** *அம்மணி! நமஸ்கரிக்கின்றோம்.*

**அல்லி :** *மங்கலமுண்டாகட்டும்.*

**சகிகள் :** *நான் கேட்கும் கேள்விக்குப்பதில் வார்த்தை சொல்லுங்கள் ஞாபகமாய். இந்த மதுரை நகர றுப து காதமும் வாழ்ந்திருக்கும் குடிகள் சுகமா?*

**சகிகள் (மந்திரி 1) :** *நலமே அம்மா!*

**அல்லி :** *மந்திரி! நமது தேசத்தின் நிலைமை எப்படி இருக்கிறது?*

**மந்திரி (கோமாளி) :** *கொஞ்சநேரத்துக்கு முந்தித்தான் பார்த்தேன் முடிமயிரு பிடிச்சு... இழுத்த இழுவையிலே....*

**அல்லி :** *என்ன?*

**மந்திரி :** *நான் வேற ஒரு நெனப்பிலே சொல்லிட்டேன் தப்பு. நம்ம குடிமக்கள் ஜெகஜோதியாய் வாழ்கிறார்கள். ஆனா? என்ன குறையின்னா ஒரு குறையுமில்லை......*

**அல்லி :** *நல்லது மந்திரி! இன்று நாம் விசாரிக்கும் படியான வழக்குகள் ஏதேனும் உண்டா?*

**மந்திரி :** *(உடை, ஒப்பனை அறையைப் பார்த்து) கொஞ்ச நேரத்துக்கு முந்தி தலை மயிரப் புடிச்சு இழுத்த வழக்கு ஒண்ணு இருக்குதுங்க.*

**அல்லி :** *மந்திரி! என்ன உளறுகிறீர்... அல்லி ராணி முன் நீற்கிறீர் என்பதை உணர்ந்து தான் பேசுகிறீரா...?*

**மந்திரி :** *நான் கனவு கண்டதைப்பத்தி ஒளறுனேன் அம்மா! இன்று தாங்கள் விசாரிக்கும்படியான வழக்குகள் ஒன்று இல்லை அம்மணி.*

*புலந்திரன் வருகிறான் (அல்லிராணியின் மகன்).*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாட்டு

புலந்திரன் :

*தாயே போற்றினேன் பாதம்*
*தந்தருள் ஆசிர்வாதம்*
*நேயமுடனே இந்த நிலத்தை ஆண்டிடுஞ் சொந்தத் (தாயே)*
*வீரம் புகழ் செல்வங்கள்*
*விருத்திமென் மேலுமுற்ற*
*விநய குணராணியே!*
*விருப்பமோடென்னைப் பெற்ற (தாயே)*

(வசனம்) : *அம்மா! வந்தனம் செய்கிறேன்.*

அல்லி : *மகனே! அருகில் வா! பாலகா! கண்மணி ஏன் அருகில் வராமல் மனச் சலிப்படைந்து புறமாய்த் திரும்பி நிற்கிறாய்?*

புலந்திரன் : *நான் கேட்கும் பொருளைத்தருவேனென்றால் உந்தன்கிட்ட வருவேன். இல்லையேல் அருகில் வரமாட்டேன்.*

அல்லி : *சொக்க மீனாட்சியின் சத்தியமாக நீ சொன்ன பொருளைத்தர இக்கணம் சம்மதித்தேன். தாமதமேனோ இன்னும் அருகில் வா...*

புலந்திரன் (பாடல்) :

*வந்தேன் வந்தேன் வந்தேன் அருகினில் (வந்)*
*வாகை வெற்றியிலே மிகுந்திடில்*
*மாதுனைத்தொழுதேன் பாலனித்தினம் (வந்தேன்)*

(வசனம்) : *அம்மா நான் என் தோழர்களோடு சிறுதேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தேன். ஒரு சிறுவனின் மரத்தேர் என் முத்துத் தேரின் மீது மோதிற்று. நீ ஏனிப்படி என்தேரின் மீது உன்தேரை மோத விட்டாய் என்று தான் அவனைக் கேட்டேன்— அதற்கவன் உன் தேர் அருமையான பவளத்தேரா? உடைந்தால் உடைந்து போகட்டும்; என்ன குடி கெட்டுப்போச்சுதென்று கேட்டான். எனக்கு ஒரு பவளத்தேர் செய்து கொடுக்க வேண்டும். இதுவே என் கோரிக்கை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அல்லி - புலந்திரன் தர்க்கப் பாடல்

**அல்லி :** சந்தனத்தால் தேரியற்றிப் பாலனே தாரேண்டா

**புலந்திரன் :** சந்தனத்தேர் தர்மர் தந்தார் எந்தனுக்கது வேண்டாம்

**அல்லி :** நீலக் கல்லால் தேரியற்றிப்பாலனே தாரேண்டா

**புலந்திரன் :** நீலத்தேரோ கிருஷ்ணன் தந்தார். ஆதலாலது வேண்டாம்.

**(வசனம்) :** அம்மா! நீ என்ன சொன்னாலும் நான் சமாதானம் அடையவே மாட்டேன். அந்த பவளத்தேர் எனக்கு கிடைக்கும்வரை அன்னாகாரங்கொள்ளவே மாட்டேன். உன்னால் முடியாதென்றால் இப்பொழுதே சொல்லிவிடு.

*(சகிகளைப் பார்த்து)*

**மந்திரி :** யார் பெத்தபுள்ளே? அப்பன் புத்தி தப்பாது இருக்கு

**அல்லி :** பவளம் எங்கே விளைகிறது பாவையரே?

**சகிகள் (மந்திரி 2) :** அம்மா! ஏழு சமுத்திரங்களைக் கடந்து போக வேண்டும். தப்பித்தவறி அங்கு போய் சேர்ந்தாலும் அங்குள்ள பிராண வாஸ்தைகள் அனந்தம், வண்டு கும்பல் கும்பலாய்ப் பறக்கும். அவைகள் காட்டுக்குள் பிரவேசிப்பவர்களைக் கடித்துக் கொன்றுவிடும்.

**அல்லி :** உங்களில் ஒருவராவது பவளக்காட்டிற்குச் செல்ல மனோதைரியமுடையவர்கள் இல்லையா?

**சகி 1 :** அம்மா! நான் சமுத்திரக் கரைவரையிலும் போவேன். சமுத்திரத்தை எப்படிக் கடப்பது என்று தான் கவலை.

**சகி 2 :** அம்மா! நான் சமுத்திரத்தைத் தாண்டிவிடுவேன். பவளக்காட்டிற்குள் போவது குறித்துத்தான் கவலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகி 3 (மந்திரி) : சமுத்திரம் தாண்டி, பவளக் கவலையில்லை. என் உயிர் போய்விடும் என்றுதான் கவலை.

அல்லி : போடி போங்கள்! யாரைக் கொண்டிந்து காரியம் செய்திடலாம் அறைவீர்! அறைவீர்!

சகி 3 (பாடல்) : அர்ச்சுனராஜ கம்பீரதுரை. அவரால் முடியும் அழை அவரை.

அர்ச்சுனராஜ கம்பீரதுரை. அவரால் முடியும் அழை அவரை.

(வசனம்)

அர்ச்சுன ராஜ கம்பீரதுரையால்தான் முடியும்.

மந்திரி : உங்கள் கணவர்தான்.

அல்லி : மூர்க்கன் தறுதலை. மடையன், தடித்தனமுடையதோர் கொடியன். அறிவில்லாதவன், அபலஸ்திரீகளை ஏமாற்றும் நயவஞ்சகன், மோசக்காரன்.

மந்திரி : உங்கள் கணவர்தான், அர்ச்சுனராஜ கம்பீரதுரை.

அல்லி : அவனை, அவன் பெயரை, மறுமுறை உச்சரித்தால் உங்கள் நாக்கைத் துண்டு துண்டாய் நறுக்கி நெருப்பிலிட்டுக் கருக்கி விடுவேன். ஜாக்கிரதை!

மந்திரி : (ஒப்பனை அறையைப் பார்த்து) இப்பப் பேசுன வசனத்தை நீங்க அரண்மனைக்கு வர்றதுக்கு முந்தி வீட்டிலேயே பேசியிருக்கணும். அப்பத்தான் ஒங்க கணவருக்குச் சரியான புத்தி வந்திருக்கும்.

அல்லி : திரும்பவும் அவனை என் கணவன்னு சொல்லாதே.

மந்திரி : இப்பச் சொன்னதும் ரொம்பச் சரிதான்.

சகி 1 : அம்மா தாங்கள் ஏழையாகிய எங்கள் மீது சினங்கொள்ளுதல் தகாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருசன்
பெரியவங்க சொன்னது...

**அல்லி :** பெரியவங்க! பெரிய இவங்க! ஆம்பளைங்க பொம்பளைகளை.... ஏய்க்கிறதுக்குக் கட்டிவச்சக் கட்டுக் கதைகள்ள இது ஒண்ணு.

**சகி 2 :** அருமைக் குழந்தையாகிய இப்பாலகன் மீதேனும் அன்பு வேண்டாமா?

**அல்லி :** புள்ளகளைப் பெத்துக்க வக்கிறதும் பொம்பளைங்களை அடக்கி வைக்கிற ஒருவகை உத்திதான் போலும்.

**மந்திரி :** நாடகம் ஆடுற தொழில் கெட்டுப்போகும்னு நெனச்சு புள்ளையப் பெத்துக்க விடாமப் புருசன் செய்யிறதும் ஒருவிதமான உத்திதான். அம்மா, இப்ப உங்கள எடுத்துக்குங்க உள்ள இருக்காரே (ஒப்பனை அறையைப் பார்த்து) ஒங்க வீட்டுக்காரரு.

**ஆர்மோனியக்காரர் :** (குறுக்கிட்டு) மந்திரி கதைய மாத்தாமப் போங்க! அடுத்த சீனுக்கு உடைமாத்த உள்ளே நீங்க வரணும். உள்ள அந்த ஆளு இருக்குது. மறந்திடாதீங்க.

**அல்லி :** சரி அவரை எவ்விதம் வரவழைப்பது?

**மந்திரி :** உள்ளேதான் இருக்கிறாரு. கூப்பிட்டா உடனே வந்துருவாரு?

**அல்லி :** மந்திரி நாவை அடக்கிப் பேசு

**சகி 1 :** ஒரு ஓலை எழுதி தூதன் மூலம் கொடுத்து அனுப்பலாம்

**சகி 2 :** தங்கள் புத்திரர்க்கு ஜன்னிகண்டிருப்பதாய் ஓலை எழுதி அனுப்பலாம்.

**அல்லி :** அர்ச்சுனன் பெயருக்கு வேண்டாம். அவர் சிரேஷ்டராகிய தர்மபூபதிக்கு எழுதினால் போதும்.

(ஆர்மோனியக்காரர் இசை வாசிக்கிறார்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காட்சி - 3

தர்மராசா, பீமர், சகாதேவன் முதலானோர் தர்பார் வீற்றிருத்தல்

(பீமராஜா ஓலையைக் காவலாளியிடமிருந்து பெற்றுத் தர்ம பூபதியிடம் கொடுக்கிறார். தர்மர் ஓலையை வாங்கிப் படித்து விட்டு)

**தர்மர் :** தூதா! நீ விரைவாய்ச் சென்று அர்ச்சுனன் வருவானென்று சொல்

**தூதன் :** உத்தரவு மகாராஜா

**தர்மர் :** தம்பி பீமா! இது என்ன விபரீதமாயிருக்கிறது? வத்ஸன் புலந்திரனுக்கு ஜன்னி கண்டு வருந்துவதாக ஓலை வந்திருக்கிறதே! அர்ச்சுனனை எங்கே சென்று தேடிப் பிடிப்பது? அசாத்தியமல்லவோ! அவன் புத்திரன் முகத்தில் விழிக்க இப்பொழுது மதுராபுரிக்குப் போகாவிடில், அல்லியால் ஆபத்து விளையும். அவள் கோபக்காரியென்பதும், சமாதானத்துக்கும் உடன்படமாட்டாள் என்பதும் நமக்குத் தெரிந்த விசயமே! இதற்கென்ன செய்வது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பீமன் :** அண்ணா தாங்களொன்றும் கவலைப்பட வேண்டாம். பார்த்தன் எங்கிருந்தாலும் சரி, கண்டு பிடித்துச் சேர்க்கிறேன். தம்பி சகாதேவா, இதற்கொரு யுக்தி சொல்.

**சகாதேவன் :** காண்டீபரோ ஸ்திரீலோகப்பிரியர். மனைவிமார்கள் அநேகர். எவர் வீட்டிலிருக்கிறாரோ தெரியவில்லை. ஒரு பொய் கூறி அவரை அழைக்கலாம்.

**பீமன் :** அப்படியே செய்வோம்

**சகாதேவன் :** தர்மண்ணாவுக்குப் பாக்குச் சொக்கேறி, மரண அவஸ்தையில் இருக்கிறார். அர்ச்சுனராஜாவை முகத்தில் விழிக்க விருப்பம் எனப் பறையடிக்கச் செய்தால் செய்தி கேட்டு அண்ணன் மேல் உள்ள பாசத்தால் எங்கிருந்தாலும் வந்துசேருவார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உடை ஒப்பனை அறைக்காட்சி - 4

**செண்பகம் :** யோவ்... நான் தொழில் பண்ண வந்த இடத்தில் வந்து தகராறு பண்ணாதே

**தரகர் :** அல்லி தர்பாரில் கணவனைக் கண்ட மேனிக்குத் திட்டினியே.

**கோமாளி :** மூர்க்கன், கொடியன், தடியன், காமாந்தகன்; மடையன், அறிவில்லாதவன். அபலஸ்திரீகளை ஏமாற்றும் நயவஞ்சகன். மோசக்காரன்.

**தரகர் :** என்னைய நெனச்சுத் தானே பேசுனே— உண்மையச் சொல்லு

**செண்பகம் :** இப்படி எதுக்கெடுத்தாலும் சந்தேகப்பட்டா நான் என்ன செய்யிறது? (தலையில் அடித்துக் கொண்டு தொங்கும் துணிமணிகளுக்குள் முகத்தைப் புதைத்து நிற்கிறாள்)

**கிருஷ்ணன் (வேடதாரி) :** எதுக்கெடுத்தாலும் சந்தேகப்படுவது குடும்பத்துக்கு அழகில்லே தம்பி.

**செண்பகம் :** (கிருஷ்ணன் வேடதாரியைப் பார்த்து) ஆம்பளைங்களோட சேர்ந்து நடிச்சு வசனம் பேசினா, அவனை வச்சிருக்கிறியான்னு கேக்குறாரு. தொட்டுப்பேசினா எனக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவடியாப் பட்டம் கொடுக்கிறாரு. அழுது கொண்டே தங்கை (சுபத்திரை வேடமிட்டுள்ளாள்)யைக் கட்டிப் பிடித்து, என்ன ஜென்மம் எடுத்தோமோ. கண்ணீரும் கம்பலையுமா நம்ம பொழப்பு இப்படி இருக்கு.

**தரகர் :** இங்கே பாரு செண்பகம், நம்ம குடும்பத்துக்கு நல்லதுக்குத்தான் சொல்லுறேன். உன் தங்கச்சிய இந்த சீசன்ல எவனாவது தள்ளிக்கிட்டுப் போயிடுவான். அதுக்குள்ள நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா, அவ சம்பாத்தியத்தை நாம் வச்சுக் குடும்பம் நடத்தலாம்ல .....

**செண்பகம் :** எங்கள வேவு பார்க்கிறதும், எங்களை மேய்க்கிறதும் தான் ஒன் தொழிலா? போய் நீ ஒரு வேலை வெட்டியப்பாரேன். குடும்பம் நடத்த வக்கில்லேன்னா, காவியக் கட்டிக்கிட்டு பிச்சை எடுக்கப் போடா.....

**தரகர்:** அடியே நாதாரி.... (அவளைப் பிடித்து அடிக்க முற்படும்போது கலைஞர்கள் தடுக்கின்றனர். ட்ரங்க் பெட்டியில் ஏறித் தொங்கிய நிலையில் உள்ள துணிமணி களின் துணை கொண்டு தன்னைத் தற்காத்துக் கொள்ள ஓடுகிறாள். ஒப்பனை அறையைவிட்டு மேடைவழியேயும் ஓடுகிறாள். மேடையில் இவனும் விரட்டி அடிக்க ஓடுகிறான். அய்யோ பாவி மனுசன் அடிக்கிறானே, அய்யய்யோ, எனக்கத்திக் கொள்வதும், அடிச்சிறுக்கி - தேவடியாளே... என அவன் கத்திக் கொண்டு ஓடுவதும், வேண்டாம், அடிக்காதே, நில்லுப்பா அப்புறம் பேசலாம் எனும் கலைஞர்களின் குரல்களும் இடையிடையே ஒலிக்கின்றன.)

NORWAY SIGNATURE SEELAN BOOKS



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காட்சி - 5

பறை அறிவிப்பு கேட்கிறது
(அர்ச்சுனன் சுபத்திரை மஞ்சம் வீற்றிருக்கின்றனர்)

இதனால் கனதனவான்களுக்கு தெரிவிப்பது என்ன வென்றால், இன்று தர்மபூபதி தாம்பூலதாரணம் செய்து கொள்ளும் போது பாக்குச் சொக்கேறி மரணாவஸ்தைப்படுகிறார். அவர் அர்ச்சுனராஜர் முகத்தில் விழிக்க விரும்புகிறார். கண்டோர் கேட்டோர் அவருக்குச் சொல்லி அரண்மனை சேர்ப்பிக்க வேண்டும். இது இளவரசர் பீமசேனர் ஆக்ஞை.

(பறைச்சத்தங் கேட்டு அர்ச்சுனன், மஞ்சத்தினின்றும் எழுந்திருக்கிறான் சுபத்திரை அர்ச்சுனன் கையைப் பிடித்துக் கொண்டு)

சுபத்திரை (பாடல்)

எங்கு செல்லுகிறீர் இப்போதெழுந்து - நீர் (எங்கு)

அநுபல்லவி

என்னாசை மன்னாசுழ்பன்னா இந்நாளினில் (எங்கு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பல்லவி

**அர்ச்சுனன் :**

வந்து சேருகிறேன் - சென்று துரிதமாய் (வந்து)

மாதவனாரின் சகோதரி! கேளடி (வந்து)

எத்தனை தேவிமார் ஏற்பட்டிருப்பினும்
எந்தனுக்குந்தனை போலுண்டோ எண்ணினும்

**தரகர் :** (பாடி ஆடிக் கொண்டிருக்கும் போது ஒப்பனை அறையிலிருந்து நாடகத் தரகர் மேடைக்குவந்து ஒலி பெருக்கியைப் பிடித்து) சுபத்திரை வேசங்கட்டியிருக்கிற என் கொழுந்தியாள் அவர்களுக்கு மாமன் சண்முகத்தின் அன்பளிப்பு ரூ.5 சிறப்பாக நடித்ததற்காக அளிக்கிறேன்.
(என்று சொல்லிவிட்டு அவளது சட்டையில ஊக்கு கொண்டு ரூபாயைக் குத்த முயற்சிக்கிறான். சுபத்திரை வேண்டா விருப்பில் கையில் பெற்றுக் கொள்கிறாள்)

**சுபத்திரை (வசனம்) :** தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டென்னும் பழமொழிக்கிணங்க, எவளையோ நினைத்துக்கொண்டு இப்படிப் பரபரப்பாய் விழுந்து ஓடுகிறீர். (ஓரமாக நின்று கவனித்துக் கொண்டிருக்கும் நாடகத் தரகர் சண்முகத்தைப் பார்த்த எரிச்சலில்...) பொம்பளைய எங்கேன்னு தெரு நாயாட்டம் நாக்கத் தொங்கப்போட்டுகிட்டுப் போறியே. ஏய்யா! ஒன் வித்தைகள் பூராம் எனக்குத் தெரியும். எங்க அக்காவைக் கல்யாணம் பண்ணிட்டு, இப்ப - தங்கச்சி எங்கிட்டே! இன்னும் எத்தனை பேர வெரட்டுவே?

ஒன்னைய சூத்தாம்பட்டையிலே நச்சு நச்சுன்னு போட்டாத் தான் எனக்கு நிம்மதி. ஒன்னைய மாதிரி ஆளை உசுரோட விடவே கூடாது. பொம்பளைகள்ளாம் ஒண்ணு சேர்ந்து கும் கும்முன்னு கும்முனாத்தான் ஒன்னைய மாதிரி பொறுக்கிகளுக்கு புத்தி வரும்.

(அர்ச்சுனன் நிலைகுலைகிறார்).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆர்மோனியக்காரர் (பாடல்):**

*அடி காதலி! என்னென்னவோ சொல்லுகிறாயே! எதற்காக வீண் கலவரப்படுகிறாய்! என்னென்னவோ சொல்லுகிறாயே! செண்பகம் தங்கையே..... (அய்யய்யோ என சுதாரித்து) கிருஷ்ணன் தங்கையே! சுபத்திரையே! என்னென்னவோ சொல்லுகிறாயே (ஒலி சடக்கென்று மறைகிறது. காட்சி மாறுகிறது)*

**பாட்டு**

*மகா சுகிர்த் ரூப சுந்தரி*
*வனிதையே புனிதையே*
*வினயமாய் மனோகரியே*
*மதனரதியே (மகா)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காட்சி - 6

*தர்மபூபதி, பீமன், நகுலன், சகாதேவன் வீற்றிருக்கின்றனர். அர்ச்சுனன் வருகிறான்*

**அர்ச்சுனன் :**

*சரணஞ் சரணந்தர் மன்னா*
*தங்கள் திருப்பாதமலர் இங்கு போற்றி நின்றேனருள் (சரண)*

*தருணம் இதிலேபாக்காலே*
*தமக்குச் சொக்கேறியதாலே*
*மரண அவஸ்தையைப் போலே*
*வாய்ந்ததென்று பறைஅறைந்தார்*
*கேட்டு நொந்தேன் மண்மேலே*

**(வசனம்) :** அண்ணா! தங்களுக்குப் பாக்குச் சொக்கேறி மரணாவஸ்தையிலிருப்பதாகப் பறையடித்தனர். அது கேட்டு ஓடிவந்தேன். தேக சௌக்கியம் இப்பொழுது எப்படி இருக்கிறது?

**தர்மர் :** அர்ச்சுனா! அப்படியொன்றும் நேரவில்லை. உன்னைக் கண்டுபிடிப்பதற்காக நமது பாந்தவர்கள் செய்த உபாயம். இந்த ஓலையை வாசித்துப்பார்.

*(ஓலையை வாங்கிப் பார்த்து)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அர்ச்சுனன் (பாடல்) :**

*அப்பா புலந்திரனே அருமைக் கண்மணியே.*
*இப்பாரினில் பாவியானேண்டா மகனே*
*ஒரு முறை கண்ட கண்ணால் மறுமுறை காண்பதற்குள்*
*உனக்கிந்த பிணி வந்ததோ. மகனே! மகனே.*

**தர்மர் (வசனம்) :** தம்பி நீ இப்படி புலம்பி வீண் காலம் போக்குவது சனமில்லாத காரியம். சீக்கிரம் மதுராபுரிபோய் குழந்தைக்கு வேண்டிய சிகிச்சை செய்து குணங்கண்டு வருவாயாக.

**அர்ச்சுனன் :** அப்படியே! நமஸ்கரிக்கின்றேன்.

*(ஒளி அணைந்து பின்வருகிறது. தர்மர் முதலானோர் சென்று விடுகின்றனர். அர்ச்சுனன் மட்டும் தனிமையில் இருக்கிறான்)*

*(அர்ச்சுனன் தனிமொழி, தனி இடம்)*

*அல்லியோ மிக கோபக்காரி. நாம் ஐந்து வருடமாக அங்கு போகாததால் சினமுற்றிருப்பாள். நம்மைக்கண்டதும் கொல்ல எண்ணினும் எண்ணுவாள். ஆகையால் ஆபத்பாந்தவன் கோபாலனைச் சகாயமாக உடன் அழைத்துப் போக வேணும். நல்லது அவரையே நினைக்கிறேன்.*

### பாட்டு

*கன்று கொண்டு விளவறிந் - கண்ணா*
*கார்முகிலே காயாம்பு வண்ணா*
*கண்ணா! கண்ணா!*
*(கிருஷ்ணன் தோன்றுதல்)*

### பாட்டு தர்க்கம்

**கிருஷ்ணன் :**

*மனமிக்க மெலிவாகி எனை நத்தியிது வேளை*
*விசினித்த விதமேது மைத்துனா.*
*எனக்கதனைச் சொல்லவும் வேண்டும் அர்ச்சுனா.*
*விழி மாரி நீர் நிறை வாரி போல் வர*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாது காரணம் நேரலானது
வரும் கஷ்டம் எதுவென்று தோணிலேன்
அந்த வகை செப்பி விடு சோகம் வீணிலேன்.

**அர்ச்சுனன் :**

வனிகைக்குள் உயர்வான மதுரைக்கரசியாளின்
மகனுக்கரிய நோயுமானதாம்
உண்ண வகையற்று மொழி யற்றுப் போனதாம். அந்த
மாது நான்வர ஓலை ஏகினாள்.
போயும் நானதி காலமானது
ஒருமித்தம் நிலையான மாதினாள்
தருமரிடத்தில் ஒரு ஓலை ஏவினாள்.

**கிருஷ்ணன் :**

ஒகோ! எனதருமை மருமகன் புலந்திரனுக்கோ
நோய் நேரிட்டது?

குழந்தைக்கு இந்நேரம் என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே!
என்ன சும்மா நிற்கிறாய் சீக்கிரம் புறப்படு.

**அர்ச்சுனன் :**

மைத்துனா! அங்கு போகத்தானே உன்னை நினைத்தேன்.
அங்கு போனால் ஒரு சங்கடமல்லவோ குறுக்கே இருக்கிறது.

**கிருஷ்ணன் :** அப்படி என்ன சங்கடம்

**கோமாளி :** வருசத்திற்கொருமுறை அல்லி மாதிடம் போய் வரவேண்டும் என்ற நியமம் தவறிவிட்டது. புலந்திரன் பிறந்த வருசம் அம்மணியைப் பார்த்துவிட்டு வந்ததோடு சரி. அப்புறம் எத்தனை பொம்பளைகளை மயக்கி எத்தனை வீடுகள்ள இருந்தாரோ தெரியாது.

**கிருஷ்ணன் :** ஒகோ! இதற்கு நானென்ன செய்வேன். அவளோ கோபக்காரி.

**கோமாளி :** அவுங்களைக் கோபக்காரியாக ஆக்குனதே இந்த அர்ச்சுன மகாராஜாதான்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கிருஷ்ணன் :** நான் மதுராபுரிக்கு வரமாட்டேன். இதோ துவாரகைக்குப் போகிறேன். நீ எப்படியாவது போ.

**அர்ச்சுனன் :** இதற்காகத்தான் உன்னை நினைத்தேனோ? பெண்களை இதவசனங்கள் சொல்லி சமாதானப்படுத்தி எனக்குக் கூட்டிவைப்பதில் உனக்கு நிகர் யார்இருக்கிறார்கள்?

**கோமாளி :** அது சரி! ரெண்டும் அகண்ட ஆப்பை, ரெண்டும் கழண்ட ஆப்பை.

**கிருஷ்ணன் :** நான் சொல்வதைக் கேள். அவளோ மிகப் பொல்லாதவள். கோபக்காரி! இருவரும் ஒருங்கே போனால் நமது காரியம் கெட்டுவிடும். நீ முன்பதாகப் போய் நயமொழி களாலேயே அவளை வசப்படுத்த முயன்று பார். அவளிணங் காது போனால் தக்க சமயம் பார்த்து நானங்கு வந்து உன்னைக் காணாதவன் போல் அவளிடம் பேசி தந்திரோபாயத்தால் உன்மீதுள்ள கோபத்தை மாற்றி வைக்கிறேன். தாமதிக்காதே நீ முன்பதாகப்போ.

**கோமாளி :** பொம்பளைங்கள ஏமாத்துறதுல ரெண்டு பேரும் பலே கில்லாடிங்க. திருட்டுப் பசங்க. அன்னையில இருந்து இன்னைக்கி வரையிலும் இவனுக தான் நாடு பூராம் பெருகிப் போயிருக்கானுக. இந்தக் கொட்டகைக்குள்ளே ஒரு பயஇருக்கான். பொம்பளைங்க முழிச்சுக்கிட்டா இவனுக பாடு அம்போ! உள்ளே அந்தப்பய இந்நேரம் என்ன ரகளை பண்ணுரானோ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உடை ஒப்பனை அறைக்காட்சி - 7

**தரகர்** : (சுபத்திரை வேடமிட்ட கொழுந்தியாளைப் பார்த்து) சூத்தாம்பட்டையிலே போடணும்னு யாரைச் சொன்னே. பொம்பளைகள்ளாம் ஒண்ணுசேர்ந்து கும்மு கும்முன்னு கும்மனும்னு 'டையலாக்', பேசினியே யாரடி பேசினே?

**சுபத்திரை (வேடமிட்டவள்)** : சுபத்திரை அர்ச்சுனனை வெறுக்கிற சீன். அந்த சீன்ல அப்படித்தான் பேசணும். பின்ன எப்படிப் பேசணும்? நீ ஏதும் வாத்தியாரைக் கொண்டு எனக்குப் பாடம் சொல்லித்தந்தியா? ஏதோ நாங்களா ஓரம் சாரமா நின்னு மத்தவங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது கேள்வி ஞானத்துலேயே பாடம் கத்துக்கிட்டோம். ஆனா, வேசம் கட்டி நடிக்கும் போது பாடம் ஏதும் தப்புச்சுன்னா அடிக்கிறதுக்கு மட்டும் கைநீளும்.

**செண்பகம்** : அவ சொல்றது சரிதான்.

**தரகர்** : இங்கேபாரடி ஒங் கதையிலாம் நான் கேக்க வரலே.... இனிமே நீ எந்த நாடகக் கம்பெனிக்கும் போயி நாடகம் நடிக்கக் கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செண்பகம் தங்கை :** (கோபமும் கண் கலக்கமும் கொண்டு) யோவ் - என்ன வார்த்தை சொன்னே? எந்தலையைப் பாருய்யா (குனிந்து தலையில் உள்ள காயத் தழும்பைக் காட்டுகிறாள்). உச்சந்தலையிலே ஒரு பெரிய தழும்பு இருக்குதே. பாருய்யா. அது எப்படி வந்துச்சு தெரியுமா? பவளக்கொடி நாடகத்திலே எங்க அக்கா அல்லி வேசம். எனக்கு ஏழு வயது. அப்ப தாயும் புள்ளையும் தர்க்கம் பாடினபோது நான் தாளம் தப்பிப் பாடிட்டேன். சட்டுனு எங்க அக்கா அதுதான் அல்லி வேசம் போட்டிருந்ததுல அது கையில இருந்த கத்திய வச்சு என்னடி பாடுறேன்னு மண்டையிலே "ணங்" கின்னு ஒரு போடு போட்டுச்சு. ரத்தம் கொட்டு கொட்டுன்னு கொட்டுச்சு. எங்க அக்கா ரத்தத்தைப் பார்த்த பிறகும் விடாமப்பாடி வசனம் பேசி நடிக்கிறத நிறுத்தலே. நானும் அதுக்கூடப்பாடி வசனம்பேசி நடிக்கிறத நிறுத்தலே. அந்தக் காட்சி முடிஞ்சு கொட்டகைக் குள்ள வந்ததும் தான் என் தலையில உள்ள காயத்துக்கு மருந்து வச்சுக்கட்டுனது. அப்படிக் கலையினா உயிரா நெனக்கிற குடும்பம்யா எங்க குடும்பம். எங்க அப்பா அழகப்பன் இந்த நாடு பூராம் பேரெடுத்த நாடகக் காரரு. யாரப் பார்த்து நாடகத்துல நடிக்காதேன்னு சொல்லுறே. ஏதோ அக்கா புருசன்னு மரியாதை வச்சா நீ அடி மடியிலேயே கை வைக்கப்பார்க்கிறியா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

NORWAY SIGNATURE SEELAN BOOKS

## காட்சி - 8

அல்லிராணி, சகிகள் வீற்றிருக்கும் தர்பார் காட்சி

**அல்லி :** சகிகளே! அர்ச்சுனன் வருவானாகில் அவனுடன் யாரும் பேசக்கூடாது.

**அர்ச்சுனன் (பாடல்) :**

வந்தேன் வந்தன முன்னரசுக்குத்
தந்தேன் மதுரா புரிராணிக்கே. (வந்தேன்)
இந்துகுல மதில் பிறந்திட்ட
இறைவி யுனது எழுத்துக் கோடி
விரைவிறுதிய இடத்தைத் தேடி (வந்தேன்)

**(வசனம்) :** இதென்ன ஆச்சரியம்! நாம் இத்தனை நாளாக இங்கு வராததால் கோபம் அதிகரித்துப் பிணக்கங் கொண்டிருக்கிற தாகத் தெரிகிறது. இவளுடைய பரிவாரப் பெண்களும் முகந்திருப்பி நம்மைப் பாராது நிற்கிறார்கள்.

(சகிகளையும், மந்திரியையும் பார்க்கிறான், யோசிக்கிறான்)

சரிதான், சரிதான்! ஐயமில்லை. ராணியின் கடின கட்டளை ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இனியென்ன செய்வது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டு

கன்னிகள்

கால்கள் நோகுதம்மா கருணை செய்யம்மா காவலாயுலகாளும்
ராணியே கோபமாகுமா - உன் ஆக்னைக்குப் பயந்து நான்
அஞ்சியே ஓடி வந்தேன் ஆதலாலினி மேலுங் கோபமதாமோ
மேனி நொந்தேன் ஓலை கண்டவுடன் ஓடிவந்த என்மேல்
உற்ற கோப மெதற்கு விட்டெனை ரசிப்பாய் நீ அன்பாய்

(வசனம்) : மதுரை மகாராணியே! உனது திருமுகலிகிதங் கண்டதும் தாமதிக்காமல் ஆக்னைக்குப் பயந்து ஓடோடியும் வந்தேனே! எவ்வளவு நேரம் இப்படி நின்று கொண்டிருப்பது? கொஞ்சம் தயவுசெய்து, சமீபத்தில் உட்காரென்று ஒரு மொழி சொல்லக் கூடாதா? என்னையறியாது ஏதாவது குற்றஞ் செய்திருந்தாலும் நீ சற்றுப் பொறுத்துக் கொள்ளக் கூடாதா?

பாட்டு

இராகம் - தன்யாசி, தாளம் - ஆதி

பல்லவி

எத்தனை நேரமாக இப்படி நிற்பேன் கால்கள் இற்றிற்று நோகுதம்மா

அனுபல்லவி

சத்தியமாக இனி சகிக்க என்னாலாகாது தரணியாளரசியே வருமமேனோ தகாது.

சரணம்

அபசாரந்தினம் செய்யும் பகைவனும் வீடுவந்தால் உபச்சாரம்
செய்ய வேணும் - என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவுடையோருரைப்பார் அதிலும் நான் உன் கணவன்
ஆதலால் அழைக்க வேணும்.

சபையினில் வந்து நின்று சாம நேரமாவதாலே
சஞ்சலமிகுந்ததெந்தன் நெஞ்சமும் துன்பத்தினாலே (எத்தனை)

**(வசனம்) :** மாதரசே நீ இவ்வித கடின கோபஞ் செய்யலாமா.......? பாதகனாய் இருந்தாலும் அவன் வீடு தேடி வந்து விட்டானானால் அவனுக்கு உபச்சாரஞ் செய்ய வேண்டு மென்று பெரியோர்கள் சொல்லுவார்களே!...

**கோமாளி - மந்திரி :** ஏய்யா! அர்ச்சுனரே! பெரியமனிதர்கள் சொன்ன மொழிகளையெல்லாம் அவுத்து விடுறியே! நீ எந்தப் பெரிய மனுசன் பேச்சுக் கேட்டு ஊருல திரியுறே... சோறு கண்ட இடம் சொர்க்கம் என்பதுபோல பொம்பளையக் கண்ட இடம் படுக்கைன்னு அலையுறே. ஒங்களுக்கு எங்க அம்மா கருணை செய்யணுமா?

அம்மா கையில பெரிய கத்தி இருக்குதே பார்த்தியா. கருணைக் கிழங்கச் சீவுகிற மாதிரி சதக்! சதக்! அவ்வளவு தான். ஒன்னைய மாதிரித் திரியுற ஆம்பளைங்களப் புடிச்சு அறுத்தாத்தான் பெண்களுக்கு மரியாதை ஏற்படும்.

(அல்லி கோபத்துடன் அர்ச்சுனன் மீது உடைவாளை உருவி வீசப் போகும் சமயம் கிருஷ்ணன் வருகிறார்)

**அல்லி :** அண்ணா! வாருங்கள்! வாருங்கள் இவ்வாசனத்தில் உட்காருங்கள்

**கிருஷ்ணன் :** மங்களமுண்டாகுக. நீயும் உட்காரு.

**அல்லி :** அண்ணா ஏது இவ்வளவு கிருபை வைத்து எழுந்தருளியது?

**கிருஷ்ணன் :** அம்மா! நான் இங்கு குழந்தை புலந்திரனைப் பார்த்துப் போய் வெகுநாளாய் விட்டதல்லவா? அவனையும் பார்த்துவிட்டு உனதுயோக ஷேமங்களையும் விசாரித்துக் கொண்டு போகலாமென வந்தேன் (திரும்பிப்பார்த்து) அர்ச்சுனா? என்ன இப்படி நிற்கிறாய்? (எழுந்து நின்று கேட்கிறார்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அல்லி :** அண்ணா இந்த ஆசனத்தில் நீங்கள் உட்காருங்கள்.

**அர்ச்சுனன் :** நீ பாக்கியசாலிதான். நீ இப்பொழுதுதான் வந்தாய். உனக்கு உட்காருவதற்கு ஆசனங் கிடைத்துவிட்டது.

**கோமாளி - மந்திரி :** இந்த நாட்டுல சீட் வாங்குறதும் சீட்டுல உட்காருறதும் ஈஸி. ஆட்சி படக்கினு போயிருச்சுனா சீட் பறிபோறதும் ஈஸி. அண்ணா ஒறவு - அம்மா ஒறவு - ன்னு ஏதாவது ஒறவு, எப்படியாவது ஒறவுன்னு இருந்தா எல்லாமே ஈஸி. இங்கே ஒங்களுக்கு எந்த உறவும் இல்லேன்னா எப்படி சீட் கெடைக்கும்?

**அர்ச்சுனன் :** இந்தத் தறுதலையைக் கொஞ்சம் சும்மா இருக்கச் சொல்லும்மா.

**கோமாளி - மந்திரி :** முதல்ல ஒங்க தலை ஒங்ககிட்டே இருக்குமான்னு எங்க அம்மாவோட கத்திதான் தீர்மானிக்கணும்.

**கிருஷ்ணன் :** அம்மா! என்ன சும்மா இருக்கிறாய்? இந்தப் பயல் செய்த குற்றத்தைச் சொல்லு! அதற்குப் பின் அவனுக்கு நான் தக்க தண்டனை விதிக்கிறேன்.

**அல்லி :** அண்ணா கேளுங்கள்! இந்த மனுசன் பொண்டாட்டி பிள்ளைகளை வைத்து வாழப்பட்டவனா?

**கோமாளி :** பொண்டாட்டிகளை மட்டும் வச்சு வாழப்பட்டவன்.

**அல்லி :** வருசத்துக்கு ஒரு முறைதவறாது வந்து போவதாகத் தங்கள் முன்னிலையில்தானே வாக்குறுதி செய்து கொடுத்தார்.

**கோமாளி :** வாக்குறுதியா?

வாக்குறுதி கொடுத்தவுக என்றைக்குச் செஞ்சு கொடுத்ததாக வரலாறு இருக்கு?

**அல்லி :** அதன்படி வந்தாரா? வாக்குறுதி இவருக்கும் இவரைச் சார்ந்தோருக்கும் தயிரும் சாதமுமாக ஆகிவிட்டது. குழந்தை நிலை என்ன? மனைவி நிலை என்ன என்று நினைக்காமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ட கண்ட சிறுக்கிகள் வீடுகளில் திரிந்து நிற்கிறார், தீவட்டி மரம்போல் சீச்சீ...

**கோமாளி** (அர்ச்சுனனைப் பார்த்து) : கண்டபடி திரிஞ்சா எய்ட்ஸ் பரவும். முதல்ல இவருமாதிரி ஆளுகளுக்குக் கிருமிகள் இருக்கான்னு சோதனை பண்ணணும். எத்தனை பெண்களுக்கு எய்ட்ஸ் சப்ளை பண்ணுனாரோ?

**கிருஷ்ணன்** : இவனது பேச்சு சரியில்லையே!

**கோமாளி** : (கிருஷ்ணனைப் பார்த்து) ஒங்களை கட்டாயம் சோதன்ன பண்ணணும்.

பாட்டு தர்க்கம்

**கன்னிகள்**

**கிருஷ்ணன் :**

அர்ச்சுனா இது உனக்குத் தகுதியா
அல்லி நிலையறியாயோ மடமதியா

**அர்ச்சுனன் :**

உரைத்ததை மறுக்கிலேன் உண்மையிதுவே

**அல்லி :**

உளறாதீர் தெரியும் உமதாசையெல்லாம்
உணர்வேன் மனைவியும் நானல்லவோ

**அர்ச்சுனன் :**

கால்களும் நோகுது கருணை செய்வாய்
கருத்து மயங்குதரைத் தேனுண்மையாய்

**கிருஷ்ணன் :**

இனிமேலிப்படி பிழைகள் செய்யாதே

NORWAY SIGNATURE SEELAN BOOKS



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அர்ச்சுனன் :**

ஒருபோதும் பிழைசெய் யேன்னானருளே
புரிய இவளிடத்தில் உரைசெய்வீரே.

**கிருஷ்ணன் :**

போதும் போதும் தங்கா கோபம் விடு
புருஷனானதால் அழைத்திடன்போடு

**அல்லி :**

ஏதண்ணா நீரென்னை ஏசிட வந்தீரோ

**கிருஷ்ணன் :**

இனி நான் உரையேன். உன் பாடு அவன் பாடு. எனக்கொன்றும் தெரியாது. நான் போறேன்.

**அர்ச்சுனன் (வசனம்) :** நீரென்ன சொன்ன போதிலும் உமது கால்களை விடமாட்டேன். நீ வேணுமானால் திமிரிக் கொண்டு போம்.

**கோமாளி :** நெனச்சதச் சாதிக்காமல் இந்த ஆளும் விடமாட்டாரு போல. உள்ளே இருக்கிற அந்த ஆளும் விடமாட்டாரு போல...

## தர்க்கப்பாட்டு

**அல்லி :**

என்னவிதம் சொன்னாலும் கேளேன் - இனிமேல்
நிஜமாய் மொழிந்தேன் - இனி
இங்கிருக்க என் மனம் தாளேன்.

எவளால் இதனால் வாராதிருந்தீரோ - அவளை
விட்டு நாடி வர ஏது நேர்ந்ததோ

**கிருஷ்ணன் :**

இன்னமும் நீ கோபம் கொண்டாய்
நன்னயமாமோ தங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லி : என்னருமை கண்டும் அன்பில்லாதவருக்காக - இங்கு (என்ன)

கிருஷ்ணன் (வசனம்) : அம்மா! மாங்கல்ய தாரணஞ் செய்த மணவாளன் பிழை செய்தால், மனைவி பொறுத்துக் கொள்வதே விரதாதர்மம். இல்லையேல் உலகம் பழிக்கும்.

கோமாளி : போட்டாண்டா ஒரு போடு. 'மாங்கல்யம்'. இந்த மாங்கல்யத்தை வச்சுக்கிட்டு எவ்வளவு தில்லுமுல்லு, பித்தலாட்டம் ஆம்பளைப்பயலுக செய்யுறானுக... (வாயில் அடித்தவாறு) தமிழ்ச்சினிமாக்காரனுக மாங்கல்யத்தை வச்சுக்கிட்டு எவ்வளவு கிறுக்குத்தனமாகப் பெண்களை அடிமைப்படுத்துற கதைகளப் பண்ணுறானுக.

## விருத்தம்

அர்ச்சுனன் :

அருமைசேர் மயிலே உன்னை அகன்றிடேன் ஒரு போதுமிங்கே
இருவென்றாலிருப்பேன், எழுந்து போ வென்றால் போவேன்.

(வசனம்) : என் பிரிய நாயகி! இனி ஒருபோதும் நீ இட்ட கட்டளைக்கு மாறாக நடக்க மாட்டேன். இருவென்றால் இருப்பேன், எழுந்து போவென்றால் போவேன். அன்பார்ந்த சுந்தரி நமது அருமைக்குழந்தை நிலையைக் காணவேண்டும்.

அல்லி : புத்திரனுக்கு ஒன்றுமில்லை. பவளத்தேர் வேண்டும் என அன்னம் உண்ணாது கவலையாய் உள்ளான். புத்திரன், ஆசையைப் பூர்த்தி செய்தால் மகனை நீங்கள் பார்க்கலாம்.

அர்ச்சுனன் : எட்டு நாளையில் கொண்டுவந்து கொடுக்கிறேன் எந்தன் சொல் தப்பாது. இந்தக் கிருஷ்ணமூர்த்தி தலையில் கைவைத்து சத்தியம் செய்கிறேன்.

கிருஷ்ணன் : அடே அர்ச்சுனா! அவள் கையிலடி அல்லது உன் தலையில் அடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கோமாளி - மந்திரி :**

*கையில் அடிச்சாலும் சரி*
*தலையில் அடிச்சாலும் சரி*
*வாயில அடிச்சிராதீங்க*
*வயித்தலடிச் சிராதீங்க*

**அல்லி :** நல்லது. இனித்தாமதிக்கவேண்டாம். ஞாபகமிருக்கட்டும். என் சேதி தெரியுமல்லவா? அங்கு போய் எவளாவது ஒருத்தியைக் கண்டு பல்லை இளித்துக் கொண்டு நின்று நாளைக் கடத்தினீரோ. அங்கு வந்து உம்மை இந்தக் கத்திக்கிரையாக்கி விடுவேன். என்ன சாக்குப்போக்குச் சொன்னாலும் ஒப்புக் கொள்ளமாட்டேன். எட்டு நாளென்பதை மறுமுறையும் ஞாபகப்படுத்துகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காட்சி - 9

தரகர் : (குடித்த நிலையில் தள்ளாடியவாறு) அடியே! எனக்குத்தண்ணி காட்டுறியா? ஒன்னைய மாதிரி எத்தனை பேரப்பாத்தவன் இந்த சண்முகம் தெரியுமா? (திரைச்சீலையை விலக்கிக்கொண்டு மேடையில் உள்ள ஒலி பெருக்கியைப் பிடித்துப் பின்பு வேட்டியை மடித்துக் கொண்டு) எத்தனை நாள் கேக்கிறேன். ஒத்துவரமாட்டேங்கிறாள். இப்ப நான் அவளைத் தொட்டு இழுக்கப்போறேன். எந்தக் கிருஷ்ணன் வந்தாலும் பாச்சா நம்பகிட்டே பலிக்காது? அடியே! (ஒருத்தியை இழுப்பதுபோல் பாவனை செய்து பாடல் பாடுகிறான்.)

'தொட்டு இழுக்காமல் போவேனோ
துரியோதனன் தம்பி ஆவேனோ'

(என்று பாடியவாறு கிரிக்கி அடிக்க முற்பட்டு மேடையில் விழுந்துவிடுகிறான்.)

தாளம் வாசிப்பவரும் கோமாளியும் மேடையில் விழுந்துள்ள அவரைத்தூக்குகின்றனர்.

தரகர் : மேடைஆடுது. மேடையை ஒழுங்காப் போட வேண்டாமா? இவனுக வேற, வந்து நம்மை அசிங்கப் படுத்துறானுக. என்னைய விடுங்க. நான் என்ன செய்வேன். மேடையை ஒழுங்காப் போட வேண்டாமா? (உளறிய வார்த்தையாக...) நான் ஸ்டடியாத் தான் இருக்கேன்...

தாளக்காரர் - கோமாளி : (அடக்கிய குரலில்) என்னப்பா! சண்முகம் சனங்கள்ளாம் கவனிக்கிறாங்கன்னு ஒரு நிதானம் வேண்டாம்... (எனக் கூறியவாறு திரை சீலைக்குப் பின்புறம் தாங்கி சண்முகத்தைக் கூட்டிச் செல்கின்றனர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பவளக்காடு காட்சி - 10

அர்ச்சுனன் கிருஷ்ணன் இருவரும் பவளக்காட்டின் வினோதங்களைக் கண்டு வர்ணிக்கிறார்கள்.

பாட்டு

**இராகம் - மோகனம், தாளம் - ஆதி**

**அர்ச்சுனன்** : ஆ! ஆ! இதென்ன காட்சி அற்புதமாட்சி (ஆ)

**அனுபல்லவி**

அழகு பவளமது விளைகிற வனமிது (ஆ)

**சரணம்**

சாகை களெல்லாம் கொடி
சன்னல் பின்னலாய்ப் படர்ந்து
தழைத்துச் செழித்து ஓங்கி
சார்ந்து எங்கு மடர்ந்து (ஆ)

**அர்ச்சுனன்** : அதோ ஒருவேடன். அவனைக் கண்டு இந்த வனத்தப்பற்றி விசாரிக்கலாம். ஓய்! யாரங்கே போறது.

**வேடன்** : ஓய்!

**கிருஷ்ணன்** : நீ யாரப்பா?

**வேடன்** : நான் ஒரு வேடன்.

**அர்ச்சுனன்** : அந்த வனம் யாருடையது?

**வேடன்** : பவளநாயகி என்னும் மாதரசிக்கு உரியது. அந்த அம்மாவுக்குத் தந்தை தாய் கிடையாது. இந்தப் பவளக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடியிலே பிறந்தாள். சேராம்பு ராஜா எடுத்துத் தன் மகளாகப் பாவித்து வளர்த்து வருகிறார்.

**அர்ச்சுனன் :** அவள் அழகு விமர்சையாகத்தானே இருக்கும்.

**வேடன் :** அந்த அம்மாவைப் போல் ஒரு பெண் எங்கு தேடிப் போனாலும் கிடையாது.

**அர்ச்சுனன் :** நல்லது, அவளுக்கு மணமாயிற்றா?

**வேடன் :** இல்லை.

**அர்ச்சுனன் :** அவளைக் காணமுடியுமா?

**வேடன் :** இந்த வனத்தின் வினோதம் காண மாதம் இரு முறை வருவதுண்டு. அப்போது மறைவாக இருந்து பார்க்கலாம். இன்று இங்கு வருவதாகச் செய்தியுண்டு.

**அர்ச்சுனன் :** நல்லது, அவளுக்குப் பிரியமான வஸ்த்து இன்னதென உனக்குத் தெரியுமா?

**வேடன் :** அன்னப்பறவையைக் காணவும் அதனோடு விளையாடவும் ஆவல் கொண்டவள் எனக் கேள்விப் பட்டுள்ளேன்.

**அர்ச்சுனன் :** சரி. நீ போகலாம் (கிருஷ்ணனைத் தனியே தள்ளிக் கூட்டிப்போய் சென்று) கிருஷ்ணா, வேடன் சொல்லியயாவும் கேட்டாயா?

**கிருஷ்ணன் :** ஆம். கேட்டேன்.

பாட்டு

**இராகம் - புன்னாகவராளி, தாளம் - ஆதி**

**கன்னிகள்**

**அர்ச்சுனன் :**

பவளக்கொடி மாதை நான் பார்க்க வேணுமே
பாதாதிகேசம் வரை நோக்க வேணுமே (பவள)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளுக்குள்ள அழகு எவருக்கும் இல்லையென
அணுகிக் கண் எதிர்வேடன் அறையக் கேட்டதனால் (பவள)

**(வசனம்) :** இந்தப் பவளக்கொடி அழகைப்பார்த்ததும் உன்னோடு வந்துவிடுகிறேன். இங்கு வந்தவேடனும் இன்று அவள் வருவாள் எனச் சொல்லியிருக்கிறான். அவளை ஒருமுறை நான் கண்ணால் காணும் பாக்கியத்தை நீ அருள் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

பாட்டு தர்க்கம்

இராகம் - கமாசு, தாளம் - ஆதி

பல்லவி

**கிருஷ்ணன் :** விட்டுவிடு பார்த்தா வீணான செய்கையிது (விட்)

அனுபல்லவி

எட்டு நாளில் வாறேனென்று
இயம்பினாய் அல்லி முன்நின்று
சட்டென அதை மறந்து
சாற்றலாமோ நீ நினைந்து (விட்)

பல்லவி

**அர்ச்சுனன் :**

பார்க்க வேணும் கண்ணால் - அந்தப்
பாவையாள் தன்னை இன்று (பா)

கார்க்கதிக மேனிமாயா
கண்ணனே என் சகாயா
சூட்சமாக சொல்லுகிறேன்
சீக்கிரம் அருள்செய் அய்யா....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கிருஷ்ணன் :**

அல்லி கோபம் வந்தால் மோசம்
யார் தடுப்பார் அவள் பிரகாசம்
சொல்லினேன் கேளும் தோசம்
துயரம் நேரும் கெட்ட தோசம்

அனுபல்லவி

**அர்ச்சுனன் :**

அல்லி கோபம் வந்தாலென்ன
அடியேனுயிர் போனாலென்ன
மெல்லியவளைப் பாராமல்
மேவிடேனென்றெண்ணு முன்னம்

**கிருஷ்ணன் :**

பாலனுக்குப் பவளரதம்
பார்க்க வந்து சேர்ந்த இடம்
மாலடைந்து மதிமயங்கி
வாடலாமோ யிந்த விதம் (விட்டு)

**அர்ச்சுனன் (வசனம்):** மைத்துனா - தயவுசெய். (சற்று உற்றுச் செவிசாய்த்து) அதென்ன ஆரவாரம்!

**கிருஷ்ணன் :** பவளக்கொடிதான் வருவதுபோல் தோன்றுகிறது.

**அர்ச்சுனன் :** சுவாமி! இதற்கொரு மார்க்கஞ் சொல்லும்.

**கிருஷ்ணன் :** (சற்று யோசித்து) அர்ச்சுனா! நீ தொண்ணூறு வயது சென்ற கிழவன் வேடம் பூண்டு இறந்ததுபோல் பாசாங்குசெய்து தரையிலே சாய்ந்து விழுந்துகிட... நானொரு இளம் பெண்ணாக வேடம் பூண்டு, உன்னைப் புருசனாகப் பாவித்து, வண்டு கடித்து, இறந்து போனானென்று மாரடித்து விழுந்து ஒப்பாரியிட்டு அழுதுபுலம்புகிறேன்! அம்முறைக்குக் குரல் கேட்டு அருகில் வருவாள். அப்பொழுது வெகு சமத்காரமாய் அவளறியாதபடி கண்ணாலே அவள் அழகைப் பார்த்துக் கொள் ஜாக்கிரதை. நீ பார்ப்பது அவளுக்குத் தெரிந்தால் மோசம் வந்துவிடும். வா! வேடம் போட்டுக்கொண்டு வருவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டு

**கோமாளி :**

பொம்பளைய வட்டமிடும்
போக்கிரிங்க திரியிறாங்க
எங்கன தொங்குது நாக்கு - புடிச்சு
அறுக்கப்போறேன் மூக்கு

**(வசனம்) :** இவனுகள்ளாம் பெரியமனுசங்க. பொம்பள பொறுக்கிக.

ராசாதி ராசாக்கள் நூறு இருநூறுன்னு பொண்டாட்டிமாருக வச்சிருக்கானுக. பொம்பளைங்களை மனுச சாதின்னு நெனுச்சானுகளா, இல்லே உசுரில்லாத ஜடங்கள்ன்னு நெனுக்கிறானுகளா?

(பவளக்கொடி தோழிகளுடன் வனவளம் காணவருகிறாள்)

பல்லவி

**பவளக்கொடி :**

வாரீரோ மகிழ்ந்து ஒன்றாய்க் கூடி
வனச் சிங்காரங்கள் பாடி
மலை போல பெரிதான பலவண்டு
மகத்வ கீதம் கொண்டு
வருவதுவும் உண்டு
வளர்க்கொடிகள் விழிகுளிர
அதிசயமாம் இது தருணம் (வாரீரோ)

**பவளக்கொடி (வசனம்) :** சகிமார்களே! உடலை நிழல் தொடர்ந்து வருவதுபோல் விடாமல் என்னைப் பின்பற்றி வாருங்கள்! பார்த்தீர்களா! எங்கு பாத்தபோதிலும் செக்கச் செவேலென செங்காடு தீப்பட்டது போல பவளங்கள் விளைந்து கொடி வீசிச் சன்னல் பின்னலாகப் படர்ந்திருக்கின்றன. ஆங்காங்கு மலைபோல பெரிய பெரிய வண்டுகளும் கதண்டுகளும் பாடி ஆடித்திரிகின்றன நல்லது. சுற்றிப்பார்த்து வருவோம் வாருங்கள்.

**கிருஷ்ணன் :** (அர்ச்சுனனிடம் கையை நீட்டி) அவள்தான் பவளக்கொடி மறைந்திருந்து பார்.

**அர்ச்சுனன் :** சுவாமி! ஆகா!... என்ன அழகு! எத்தனை வண்டுகள் அவளைச் சுற்றி வட்ட மடிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒப்பனை அறை காட்சி - 11

தரகர் : அடியே! செண்பகம். இங்கே ஒருகொலை விழப் போகுது, என்னடி அக்காளும் தங்கச்சியும் கிச்சு கிச்சுத்தம்பலம், கியாக்கியாத்தம்பலம்னு எங்கிட்டே விளையாடுறியளா?

ஆர்மோனியக்காரர் : தம்பி சண்முகம். நீ ஒரு நாடகக் கம்பெனி வச்சு நடத்துன ஒருத்தர். இப்படி தொழில் செய்யிற இடத்தில் வம்பு வழக்கு பண்ணுறியே! நாளைக்கு எந்த ஊருலயும் நாடகத்துக்கு நம்மள ஒரு பயகூட பாக்கு வைக்க வர மாட்டான். எல்லாரோட பொழப்பும் கெட்டுப்போகும் தம்பி. விடியப்போகுது. நாடகம் முடியப்போகுது. இன்னும் கொஞ்சம் நேரம் சும்மா இருப்பா.....

தரகர் :

ஒனக்கு ஒன்னோட பிரச்சனை
எனக்கு என்னோட பிரச்சனை
எம்பொண்டாட்டிக்கிட்டே நீ பேசு
அவளோட தங்கச்சிய எனக்குக்கட்டித்தரச் சொல்லு

சுபத்திரை (வேடதாரி) : எல்லாருடைய பொழப்புலயும் மண்ணள்ளிப் போடனும்னே கார் ஏறி இங்கே வந்திருக்கு இந்த ஆளு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரகர் : அடியே எங்கொழுந்தியா! ஒன்னைய ராசாத்தி கணக்காவச்சுக் குடும்பம் நடத்துவேன். வாடி எங்கூட.

செண்பகம் : இதே வசனத்தைத்தான் எங்கிட்டேயும் பேசுனே. ஆனா என்ன செஞ்சே? கஞ்சிக்கு வழியில்லேன்னு. நாடகம் நடிக்கப்போகலைன்னா ஊருலதான்டி போகணும்னு என்னைய நாடகத்துல நடிக்க வச்சே... இப்ப எந்தங்கச்சி வாழ்க்கையை கெடுக்கப்பார்க்கிறே...

தரகர் : சரி இப்பச் சொல்றேண்டி.... (உரத்த குரலில்) நீ இனி நாடகம் நடிக்காதே...

செண்பகம் : இந்த நாடகக்கலை ஒன்னையும் என்னையும் சோறு போட்டு வளர்த்தது. நீயெல்லாம் ஒரு மனுசனா? ஆர்மோனியச் சத்தமும் மேளச் சத்தமும் கேட்டதோடதான் இந்த உயிர் இந்த ஒடம்பவிட்டுப் போகணும்.... (ஓ! என அழுது, துணிமணிகளுக்குள் முகம் புதைக்கிறாள்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வனக்காட்சி - 12

*கிருஷ்ணன் மாயப் பெண்ணாகவும், அர்ச்சுனன் வயது சென்ற கிழவனாகவும் வேசமிட்டு வருகிறார்கள். அர்ச்சுனன் கீழே படுத்துக் கொள்கிறான்.*

பாட்டு

**இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஏகம்**

**கிருஷ்ணன் :**

*சாக உமக்கு விதிவந்ததோ*
*சஞ்சலம் வண்டினாலே தேர்ந்ததோ*
*ஆவி சோருது கண்பார்த்திடும்*
*அன்புடனென் பேர் சொல்லிக்கூப்பிடும்*
*சின்னஞ்சிறு பெண்ணாள் என்னை விட்டு*
*சேர்ந்ததேனோ விண்ணுலகத்துக்கு*

*(பவளக்கொடி வருகிறாளா என நோட்டமிடுகிறான்)*

**பவளக்கொடி** : *சகி மார்களே! ஓடிவாருங்கள்! ஓடி வாருங்கள் நம்மைப்போல் ஒரு பெண் அபயக்குரலிட்டு அழுது கொண்டிருக்கிறாள்.*

*நாமப் பெட்டி எடுத்தாடி என்று*
*எந்நாளும் சொல்லுவீரே நாதா என்று*
*பூமிக்குப் பாரமாய் என்னை விட்டுப்*
*போய் மடிந்தீரோ சொர்க்கத்திற்கு*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டு

பவளக்கொடி :

என்னவிதி வந்தது
ஏனழுது புலம்புவது
அன்ன தெனக்குச் சொன்னால்
அவதி தொலைப் பேனின்னாள். (என்ன)

கிருஷ்ணன் :

வண்டு கடித்ததாலே
மணவாளன் செத்ததாலே
அண்ட இடமோ இல்லை
யார் தணிப்பாரிந்தத்தொல்லை

பவளக்கொடி : ஏ! மாதே! நீ விசனப்படாதே, உன் கணவனுயிருக்கு சேதமில்லை. இந்த இடத்திலுள்ள கொடியவிசமுள்ள வண்டு, கதண்டுகள் கடித்திருக்கின்றன. இவ்விசம் இறங்கிப் போக எனக்கு மருத்துவம் தெரியும். நீ சற்று மறைவாக இரு. (கிருஷ்ணன் சென்றதும் திடீரென யோசித்தவளாய்) சகிகளே இந்தக் கிழவன் உயிர் வந்ததும் என் அழகைக்கண்டு கட்டிப்பிடித்தால் என்ன செய்வது. இக்கிழவனின் கை கால்களைப் பிடித்துக் கட்டுங்கள்.

சகி : அப்படியே அம்மா!

(அர்ச்சுனன் கண்ணை விழித்துத் தலையைத் தூக்கிப் பவளக்கொடியாளைப் பார்க்கிறான். சகிகள் வருவது தெரிந்து தலையைக் கீழே போட்டு கண்ணை விழித்துப்பார்க்கிறான். சகிகள் கொடியால் அர்ச்சுனன் கை கால்களைக் கட்டுகிறார்கள்.

(அர்ச்சுனன், கை, கால் அசைத்து சேட்டை செய்கிறான்)

பாட்டு

இராகம் - தோடி, தாளம் - ஆதி

பவளக்கொடி :

வண்டு கடித்ததில்லையடி இவனை (வண்டு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### அனுபல்லவி

இவன் வஞ்சக மாயங்கள் தந்திர மறிந்த கள்ளனடி (வண்டு)
பெண்களுக்குள்ளே இவன் பெருஞ் ஜெக ஜாலியடி
பேசுவதெல்லாம் திருட்டு

(வசனம்) : தோழிகளே! இவர்களைப் பார்த்தால் பெரும் மோசக்காரர்களைப் போல் தோன்றுகிறது

**தோழி :** ஒங்களுக்குத் தெரிந்தது. எல்லாருக்கும் (பார்வையாளர் களைக் காட்டி) தெரியவில்லையே!

**பவளக்கொடி :** இவன் அநேக ஸ்திரீகளை ஏமாற்றும் கள்ளனென்பதாக அறிகிறேன். இவ்விருவரது நடை. பாவனைகளைப் பார்த்தால் எனக்கு ஏதோ ஒரு ஆபத்தையோ, அவமானத்தையோ விளைவிக்க வந்தவர்களாக விளங்குகின்றது. இதற்கு என்ன செய்யலாம்?

(அர்ச்சுனன் கட்டுக்களைத் தெறிக்கும் படிச் செய்கிறான்.)

### பாட்டு

### இராகம் - பியக், தாளம் - ஏகம்

### கண்ணிகள்

**பவளக்கொடி :**

கட்டிய கட்டுக்கள் பட்டுப்பட்டென்று விட்டுத் தெறிக்குதடி
கள்ளனிவனையே
மெல்லென வில்லை இச்செய்கையுரைக்குதடி

(அருமைத் தோழிகளே ஓடிவாருங்கள் எனச் சப்தமிட்டுக் கொண்டே ஓடிவிடுகின்றனர்)

(அர்ச்சுனன் எழுந்து வேடத்தைக் கலைத்து விட்டு)

**கிருஷ்ணன் :** நீ கண்டாயா? அவள் மிகுந்த அழகுள்ளவளாகத் தானிருக்கிறாள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அர்ச்சுனன் :** கல்யாணஞ் செய்துவையுமே கண்ணபிரானே!

**கிருஷ்ணன் :** (கோபத்துடன்) பேஷ்! நல்ல வார்த்தை சொன்னாய். முதலாவது, அவள் அழகைக் கண்டால் போதும் வந்து விடுகிறேன் என்றாய். இப்போது கல்யாணம் செய்துவை என்கிறாய். உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? வா, வா. பவளரதத்துக்கு வழிதேடுவோம்.

**அர்ச்சுனன் :** கிருஷ்ணா! உனக்குத்தான் பைத்தியம் பிடித்துள்ளது. பவளரதம் கிடைப்பதற்குத்தான் நான் உபாயம் கூறுகிறேன். இந்தப் பெண்ணுக்குச் சொந்தம் இந்தப்பவளக்காடு. இந்தப்பெண் எனக்குச் சொந்தமானால் இந்தப் பவளக்காடே நமக்குத்தானே சொந்தம்...

**கிருஷ்ணன் :** (சற்று யோசித்து) சரி! பவளக்கொடிக்கு அன்னப்பட்சி என்றால் மிகவும் பிடிக்கும் என்று அந்த வேடன் சொன்னான். நீ அன்னப்பட்சியாக மாறு. நான் அன்னப்பட்சி விற்பவனாக வேடமணிந்து காரியத்தைத் தொடங்குவோம்.

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒப்பனை அறைக்காட்சி - 13

**தரகர் :** நான் எத்தனை நாடகம் காட்டியிருக்கேன். அக்காளும் தங்கச்சியும் எனக்கே நாடகம் நடிச்சுக்காட்டுறாளுக. ஏன்டீ, இனி எப்படி நாடகம் ஆடுவீங்கன்னு பார்க்கிறேன். (உடை ஒப்பனைப் பொருட்களை எடுத்து ட்ரங்க்ப் பெட்டிக்குள் வைக்கிறான். பல கலைஞர்களும் வேண்டாம் சண்முகம் நாடகம் முடிஞ்சதும் பேசிமுடிக்கலாம், கொஞ்சம் பொறு என சமாதானப்படுத்துகிறார்கள்.)

**தரகர் :** ஏண்டி என்னை இளிச்சவாயன்னு நெனச்சீங்களா!

**சுபத்திரை (வேடதாரி) :** யோவ்! நீ எங்க அக்காவுக்குத்தான் புருஷன். எனக்கு இல்ல. என் துணிமணிகளை ஏன்யா எடுத்து வைக்கிறே! கொடுய்யா! விடுய்யா! பெட்டியக்குடுய்யா!

**செண்பகம் (அல்லி) :** (தரகர் கால்களைப் பிடித்துக் கெஞ்சியவாறு) யோவ்! ஒன்னையக்கும்புட்டுக் கேட்டுக்கிறேன்யா! ஏய்யா! இப்படிக் குடிச்சிட்டு வந்து எங்கள இந்தப்பாடு படுத்துறே! வீட்டுலதான் ஒன்தொல்லை தாங்க முடியலை. இங்கே வந்து நாலு சனங்களப்பார்த்து நடிக்கறதுல, அவுங்க கைத்தட்டுறதுல ஒரு சந்தோசம். அந்தச் சந்தோசத்தில் தான் இந்த உசிரே நிக்குது. அதில மண்ணை அள்ளிப்போடப் பாக்கிறியே! விடுய்யா! (அவனது காலைப் பிடித்துக் கெஞ்சுகிறாள்) பலரும் அவனைத்தடுக்கின்றனர். அனைவரையும் மீறி பெட்டியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு தரகர் நடக்கிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தாளக்காரர் :** *(அதனைக் கவனித்துத் தாங்கமாட்டாத கோபத்துடன், ஆனால் ஒரு வித நடிப்புடன்)* அண்ணே! ஒங்கபிரச்சினை யெல்லாம் எனக்குத் தெரியும். நான் நாடகம் தொடங்கினதிலே இருந்து கவனிச்சுக்கிட்டு வாறேன்: பெட்டியை இறக்குங் கண்ணே! என்னை நம்புங்க. நான் ஒங்களுக்கு ஒரு நல்ல வழி செஞ்சு தாறேண்ணே!

*(பெட்டியைத் தலையிலிருந்து இறக்கி வைத்ததும், கன்னத்தில் 'பளார்' என ஒரு அறை... அறைகிறார் தொப்பென கீழே விழுகிறார் தரகர்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பவளக்காடு காட்சி - 14

(கோமாளி வரும்போது ஒளிமங்கலாகவும், அர்ச்சுனன் - கிருஷ்ணன் சந்திப்பில் ஒளி பளிச்செனவும் வரச் செய்ய வேண்டும்.)

**கோமாளி :** (அவையோர் முன் வந்து) கிருஷ்ணன் அர்ச்சுனனை அன்னப்பட்சியாக்கி பவளநாயகியிடம் வேட ரூபங்கொண்டு விற்றுசென்று விடுகிறார். பவளக்கொடி மஞ்சத்தில் சயனித்துக் கொள்கிறாள். அர்ச்சுனன் அன்னப்பட்சி ரூபத்தை மாற்றி விடுகிறான். பவளக்கொடி உடைவாளைக்கீழே நழுவவிட்டு நாணப்பட்டுக் கொண்டு அர்ச்சுனனைப் பார்க்கிறாள். இருவருடைய சந்திப்பும் நடைபெறுகிறது. பவளக்கொடி அர்ச்சுனனுக்கு மாலை சூடுகிறாள்.

**அர்ச்சுனன் :** கண்ணா! என்ன சமாச்சாரம்?

**கிருஷ்ணன் :** அல்லி கையில் கத்தியோடு உன்னைத் தேடி வருகிறாள்.

**அர்ச்சுனன் :** அல்லி வருகிறாளா?

**கோமாளி :** சோறு கண்ட எடம் சொர்க்கம் என்பது போல பொம்பளையக் கண்ட இடத்திலே படுக்கையை வச்சுக்கிட்டா கத்திமட்டுமல்ல துப்பாக்கியே வரும். டம்முன்னு...

**அர்ச்சுனன் :** அய்யோ! என் தலை போய் விடுமே! கிருஷ்ணா! நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும் (காலைக் கட்டிப் பிடிக்கிறான்)

**கிருஷ்ணன் :** இப்பொழுது தான் புத்திவந்ததோ? நல்லது! அருகில் வா. (காதோடு, ரகசியம் பேசுகின்றனர்)

அர்ச்சுனா! இறந்தவன் போல நடிக்க வேண்டும். நான் உன் மனைவிமார்களுக்கு இழவோலை சொல்லி வருகிறேன். மனைவிமார்கள் ஒருவருடைய கோபமும் உனக்கு வராமல் ஒரு நாடகம் நடத்துகிறேன் பார். நீ இறந்தவன் போல் நான் சொல்லும்வரை நடிக்க வேண்டும். சரிதானா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அரண்மனை வீதிகள் காட்சி - 15

(கிருஷ்ணன் மாறுவேடத்தில் பறையறிவித்து வருகிறார். மேடையின் திசையெங்கும் மாறி, மாறிப் பறையறிவித்து சாவோலைச் செய்தியளிக்கின்றான். இடம், காலம் கடந்து செல்வதைப் பார்வையாளர்களுக்கு உணர்த்த பறை வாசிப்பு, நடைவேறுபாடு, ஓட்டம், நடை, குரல், அடவு, வட்டவலம் போன்றவற்றால் வேறுபடுத்தலாம்)

**(திசை - 1) :** அல்லி மகாராணி அம்மணி! தர்மராஜாவின் தம்பி அர்ச்சுனமகாராஜா, பவளக் கொடி நாட்டில் பவளம் எடுக்க வந்த இடத்தில் இறந்து போனாராம். டம,டம, டம....

**(திசை - 2) :** சுபத்திரை மகாராணி தர்மராஜாவின் தம்பி அர்ச்சுன மகாராஜா, பவளம் எடுக்க வந்த இடத்தில் இறந்து போனாராம். டம, டம, டம...

**(திசை - 3) :** பவளக்கொடி மகாராணி அம்மணி! தர்மராஜாவின் தம்பி அர்ச்சுன மகாராஜா பவளம் எடுக்க காட்டுக்குள் சென்றிருந்த வேளை விச வண்டுகள் கடித்து இறந்து போனாராம். டமர, டமர, டமர,

**(திசை- 4) :** நாகக்கன்னி மகாராணி! அம்மணி! தர்மராஜாவின் தம்பி அர்ச்சுன மகாராஜா பவளன்கொடி நாட்டில் பவளம் எடுக்க போன இடத்தில் இறந்துபோனாராம். டமுக்கு!, டமர! டம, டம!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**(திசை -5) :** *பாஞ்சாலி மகாராணி அம்மணி! தர்மராஜாவின் தம்பி அர்ச்சுனன் பவளக்கொடி நாட்டில் பவளம் எடுக்க போன இடத்தில் இறந்து போய்விட்டார். டமுக்கு, டமுக்கு, டமுக்கு...*

**(திசை -6) :** *மின்னல் ஒளி ராணி அம்மணி! அவர்களுக்குச் சாவோலைச் செய்தியாவது! தர்மராஜாவின் தம்பி அர்ச்சுனன் மகாராஜா மகன் புலேந்திரனுக்குப் பவளத்தேர் செய்ய பவளம் எடுக்கப் போன இடத்தில் பவளக்கொடி நாட்டில் இறந்து விட்டார்... சனக், சனக், சன, சன, சக்,சக்...*

**கோமாளி :** பொம்பளைங்கள ஏமாத்துறதுக்கு ஆம்பளைங்க சொல்லுற பொய், பித்தலாட்டம் ஏமாற்று, நயவஞ்சகம், கொஞ்ச நஞ்சமா? அந்த நாளையிலே இருந்து இன்றைக்கு வரையிலும் வீட்டிலே, தெருவிலே, ஆபீஸ்லே, தொழிற் சாலைகள்ள, தேர்தல்ல, பாராளுமன்றத்திலே இந்த ஏமாத்து தொடர்ந்து நடக்குது. நம்ம திண்ணைகள்ல சொல்லப்பட்ட கதைகளிலேயும், மகாபாரதம் ராமாயணக் கதைகளிலேயும் பொம்பளைங்களை ஆம்பளைங்க ஏமாத்துற வித்தைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் எக்கச்சக்கமா இருக்குது. நம்ம பொம்பளைங்களும் சொந்த புத்தியை அப்பப்ப வாடகைக்கு கொடுத்துட்டு அல்லது கடன் கொடுத்துட்டு, சிலநேரங்கள்லே... வித்துப்புட்டு வந்துருவாங்க போலே... செத்தது போல நடிக்கிறான் அர்ச்சுனன், செத்ததுபோல நடிக்கவச்சிருக்கான் கிருஷ்ணன். அர்ச்சுனனுக்கு ஆறு மனைவிமார்கள். இந்த அரை டஜன் பொம்பளைங்களும் இப்ப இங்கே வந்து குடுமிச்சண்டைபோடப் போற வேடிக்கையைப் பார்க்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வனக்காட்சி -16

*(பிணமாக அர்ச்சுனன் படுத்து நடிக்கிறான்)*

**சுபத்திரை :** *(வருகிறாள்)*

**இராகம் - முகாரி, தாளம் - ரூபகம்**

இறந்தீரோ எனை நினையாமல்
ஏனோ நீர் மறதியானீர் (இறந்தீரோ)

சிறந்த தமது திருமுகத்தை
தேவியான இப்பாவிகாண்பேனோ (இறந்தீரோ)

**சுபத்திரை (வசனம்) :** நாதா! என்னைக் காணாமல் எப்படி இருக்கிறீர்? தங்கள் திருமுகத்தை நான் இனி எப்படிக் காண்பேன்?

*(என பிணத்தின் மீது விழுந்து புலம்புகிறாள். பிணமாகப் படுத்துள்ள அர்ச்சுனன் அவளைத் தன் கைகளால் வருடி விட்டு அவள் கவனிப்பதற்குள் கைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருகிறான்).*

**நாகக்கன்னி :** வருகிறாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டு

நாதா!

மாங்கல்யந்தன்னை நீங்கி வாழ்வேனோ!
மாற்றார் நகைக்க மனமும் நோவேனோ!

NORWAY SIGNATURE SEELAN BOOKS

(வசனம்) : நாகக்கன்னி, நாகக்கன்னி என்று வாய் நிறைய அழைப்பீர்களே! உங்கள் குரலை இனி நான் எவ்விதம் கேட்பேன்... அய்யய்யோ! எனது நடனத்தை நீங்கள் பார்த்துப் பார்த்து ரசிப்பீர்களே! எனது இசையைக் கேட்டுக்கேட்டு ரசிப்பீர்களே! உங்களை நான் இனி எவ்விதம் காண்பேன்....

மின்னல் ஒளி (வருகை) : நீங்கள்ளாம் யாரு! என் கணவர் இங்கே!.... (பிணத்தின் முகத்தைத் திரும்பிப்பார்த்து....) அய்யய்யோ! நான் மின்னல் ஒளி வந்திருக்கேன். அய்யோ! அய்யய்யோ! யார் நீங்கள் ஏன் என் கணவரைத் தொட்டு அமர்ந்திருக்கிறீர்கள்?. யார் நீங்கள்?

பாட்டு

இராகம் - தேசிக தோடி, தாளம் - ரூபகம்

பவளக் கொடி : மாலையிட்டென்னை எட்டு நாளாகவில்லை மன்னா நீர் கைவிடலாமா?

(வசனம்) : யாரடி நீங்கள் தள்ளிப் போங்கள்! தள்ளிப் போங்கடி!

(கைவாளை எடுக்கிறாள்)

பாட்டு

விரித்த முகூர்த்தம் மணப்பந்தலின்னும்
பிரிக்கவில்லை அய்யய்யோ! நாதா!

(வசனம்) : எனது நாடு. இது எனது பவளக்காடு. இவர் எனக்குத்தாலி கட்டிய கணவர். எட்டிப் போங்கடி.

பாஞ்சாலி : (வருகிறாள்) பாஞ்சாலி வந்திருக்கிறேன். நாதா! (பிணத்தின் மீது விழுகிறாள்). இந்த காட்டுக்குள் வந்தா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படி அனாதைப் பிணமாய்க் கிடக்கிறீர்கள்? உங்கள் சகோதரர்கள் வந்து கேட்டால் நான் என்ன சொல்வேன். பஞ்ச பாண்டவர்க்குப் பத்தினி என நாடே போற்றுமே. இனி நால்வர்க்கு நாயகி என்றா என்னை ஊரார் அழைப்பது. நாதா! (பார்வையாலேயே பக்கமிருப்போரை எட்டியிருக்கச் செய்கிறாள்).

**அல்லி :** (வருகிறாள்) (அல்லி கத்தியோடு வரும் தோரணையிலேயே திசைக்குத்திசை பிணத்தில் விழுந்தழுத மனைவிமார்கள் எட்டிச் செல்கின்றனர்)

பாட்டு

மாலை எங்கும் சந்தனமண
வாசம் யாவு மிழந்தேனே
சேலை வெள்ளையுமாக வாழ்வேனோ
சிந்தை வாடியும் நொந்தேனே.

(சக்களத்திப் போராட்டம்)

பாட்டு தர்க்கம்

**பவளக்கொடி :**

எனது கணவர் தேகமதில் விழுந்
தேனடி இங்கு புலம்புகிறாய்.

**அல்லி :**

எனது கணவர் தேகமதில் விழுந்
தேனடி இங்கு புலம்புகிறாய்.

**சுபத்திரை :**

இவரோ உனது நாயாகரானவர்?
இங்குற்றுப் பார்த்துண்மையாய்க் கூறடி

**நாகக்கன்னி :**

நீ! இவரோ உனது நாயகரானவர்
இங்குற்றுப் பார்த்துண்மையாய்க் கூறடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அல்லி :**

என்னடி நானிங்கு சொல்லச் சொல்லச் சும்மா
எதிர்த்தெதிர்த்தெனை வாதிக்கின்றாய்.

**பாஞ்சாலி :**

தாலி கட்டிக் கொண்ட தேவி நானிருக்கச்
சண்டை நீங்கள் போடுவதேனடி.

**மின்னல் ஒளி :**

கேலி மொழிபேசி இந்த வேளையினில்
கிட்டியிருந்து வந்ததுமேனடி

**நாகக்கன்னி (வசனம்) :**

வித்தாரக் கள்ளி விறகொடிக்கப் போனாளாம்
கத்தாளை முள்ளுக் கொத்தோட, குத்துச்சாம்
என் கணவர் உத்தம புருசர் என்ன வெளையாடுறியளா?

**மின்னல் ஒளி :** அழகுப் பொண்ணு காத்தாடி ஒன்னை அழைக்கிறான் பத்துப் பேரு கூத்தாடி, என்னாங்கடி! எல்லாப் பேரும் சேர்ந்து பேசி வச்சிக்கிட்டு என்னைய கிருக்கச்சிப் பட்டம் கூட்டுறியளா? பொணம் என்னுடையது (பரபரவென பிணத்தை இழுத்து நகர்த்துகிறாள்).

**சுபத்திரை :** இறந்த பொண்ணுக்குக் கலியாணமாம். எரவான மெல்லாம் பலகாரமாம். எவடி என் புருசன் பொணத்தைத் தொட்டவளவடி! கைய வெட்டிருவேன்.... (பிணத்தை இழுத்து வேறுபக்கம் கொண்டு செல்கிறாள்)

**பவளக்கொடி :** அடி! ஏ! சக்காளத்திகளா! என்னமோ சொன்னா ளாம் பொம்மனாட்டி உத்துக் கேட்டானாம் கம்மனாட்டி. (பிணமாக நடிக்கும் அர்ச்சுனன் எழுந்து அமர்ந்து சண்டைகளைப் பார்த்துவிட்டு மீண்டும் பயந்து படுத்துக் கொள்கிறான்)

**பாஞ்சாலி :** கலக்கந்தக்காரி கைலாசம் போனாளாம். இருகலம் கந்தக்காரி எதிருக்க வந்தாளாம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடியே சிருக்கிகளா! நான் அஞ்சுபேருக்கு பொண்டாட்டி! சும்மா எங்கிட்டே வம்பு பண்ணாதீங்க! என்னோட உண்மையான சொரூபத்தை வீணா காட்ட வச்சிராதீங்க.

**அல்லி (வருகை) :** காக்கா கர்ன்னுச்சாம்! கழுகு குர்ன்னுச்சாம்!

என் கத்திக்கு வேலை வச்சிராதீங்க ஓடிப்போங்கடி! அஞ்சு தலை இன்னும் கொஞ்சநேரத்திலே விழுந்து இந்த ஆளோட சேர்த்து அரைடஜன் பொணமாயிரும் இந்த இடம். (ஓட, ஓட விரட்டுகிறாள் அல்லி. அனைவரும் கதிகலங்கி ஓடும்போது, பிணமாகப்படுத்துள்ள அர்ச்சுனனும் பயந்துபோய் எழுந்து கூட்டத்தோடு ஒரு வட்டமடித்து ஓடிவிட்டு மீண்டும் வந்து படுத்துக் கொள்கிறான்).

(கிருஷ்ணன் வைத்தியர் வேடம் பூண்டு வருகிறார்)

**கிருஷ்ணன் :** அம்மணிகளே! நீங்களெல்லாம் யார்? ஏன் இப்படி ஓடிப்பிடித்து விளையாடுகிறீர்கள்?

**அல்லி :** (எரிச்சலுடன்) ஆமா! வா! ஆட்டத்திலே ஒரு ஆளு கொறையுது! வா. சேர்ந்து வெளையாடுவோம் (அனைவரும் பதுங்கியவாறு நடுங்கி நிற்கின்றனர்)

**கிருஷ்ணன் :** நானோ வயசாகிப்போன ஒரு வைத்தியர். என்னால் உங்களோடு வெளையாட முடியாது.

**அல்லி :** யோவ் (கத்தியைக் கழுத்தில் வைத்து) வைத்தியரே! விச வண்டு கடித்து இறந்து கிடக்கும் இந்த ஆளோட உசிரை மீட்டுத் தரமுடியுமா!

**கிருஷ்ணன் (வைத்தியர்) :** எந்த விசம் உடம்பில் சென்றிருந்தாலும் விசத்தை முறித்து உயிர்ப்பித்துத்தரும் வல்லமை எனக்குண்டு.

(அனைவரும் ஓடிவந்து, வைத்தியரே உயிர்ப்பித்துத்தாரும் எனக் கெஞ்சுகின்றனர்)

**அல்லி :** இந்த ஆளு உயிர் பெற்று எழுந்திரிச்சதும் கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருக்குது. விசாரணையிலே நான் நெனச்ச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாதிரி அசகு பிசகுன்னு இருந்து இவளுகளுக்கு இந்த ஆளு கணவர்னு உறுதியாகுச்சு, இந்தக்கத்திக்கு இவருபலியாக வேண்டியதுதான்.

**பவளக்கொடி :** இவளுகளையெல்லாம் கல்யாணம் பண்ணிட்டு என்னைய வந்து ஏமாத்திக் கல்யாணம் பண்ணுனவரு இந்த ஆளுன்னு தெரிய வந்தது. இந்தப் பவளக் காட்டிலேயே வெட்டிப் புதைச்சிடுவேன் இந்த ஆளை.

**சுபத்திரை :** எனக்கு அப்பவே தெரியும். இந்த ஆளு ஒரு பொம்பளபொறுக்கின்னு! இந்த ஆளுக்கு உசிரு வரட்டும். இந்த ஆளோட உயிரு என் கையாலேயே போகணும்.

**நாகக்கன்னி :** ஏன்! ஆளாளுக்கு இப்படி செத்துக் கெடக்கிறவரப் பேசுறீங்க! உசிரு வரட்டும். அவருக்கு யாரு புடிக்குதோ, அவளோட வாழட்டும்.

**மின்னல் ஒளி :** இந்த ஒலகத்திலேயே என் அழகுக்கு எவனுமே இல்லேன்னு எங்கிட்டே அவரு சொல்லாத நாளில்லே.

**கிருஷ்ணன் :** (கிருஷ்ணனும் அர்ச்சுனனும் ரகசியமாய் சமிக்ஞை செய்து கொள்கின்றனர்). சரி! இவரு உசிர நான் காப்பாத்தித் தரணும்னா! நீங்க எல்லோரும் எனக்கு ஒரு சத்தியம் பண்ணிக் கொடுக்கணும் (அனைவரும் சம்மதிப்பதுபோல் தலையை ஆட்டுகின்றனர்)

இறந்தவன் மேல் யார்யாருக்கு மனவருத்தமிருகிக்கிறதோ அவர்களெல்லாம் இப்பொழுது அத்தனை மன வருத்தத்தையும் நீக்கி விட்டதாகச் சத்தியஞ் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் என் மருந்து நல்லபயனைக் கொடுக்கும்! என்ன சொல்லுகிறீர்கள்?

**அனைத்துப் பெண்களும் :** சுவாமி! எல்லோரும் அப்படியே பிரமாணம் செய்து கொடுக்கிறோம்! அநுக்கிரகியுங்கள். (அனைவரும் சத்தியம் செய்வதாக வைத்தியர் கையில் கைகளை வைக்கின்றனர்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வைத்தியர் :** (அல்லியைச் சுட்டிக்காட்டி...) இந்தப் பெண்ணுக்கு இறந்தவன் மேல் அடங்காக் கோபமிருக்கு என்று என் புத்திக்குப்படுகிறது.

**அல்லி :** (மனதில் தெளிவு பெற்றவளாய்ப் பெருமூச்சு விட்டு), என்புத்திக்கு இப்பத்தான் பட்டது. நீ இந்த ஆளை உயிர் பெறச் செய். இந்த ஆள அப்புறம் வந்து நான் பார்க்கிறேன். அதுக்கு முன்பு ஒப்பனை அறைக்குள்ளே ஒரு ஆளு இருக்கான். அவனை ஒருகை பார்க்கணும் இதோ வந்துவிடுகிறேன். (உள்ளே வேகமாய்ச் செல்கிறாள்.)

**வைத்தியர் :** சரி! நீங்க எல்லோரும் மறைவாக இருங்கள் நான் ஒரு மந்திரம் ஓத வேண்டும். (அனைவரும் ஒதுங்கித் திரும்பி நிற்கின்றனர்)

(ஒப்பனை அறைக்காட்சிக்கும், மேடைக்காட்சிக்கும் சமகாலத்தில் ஒளி பாய்ச்சப்பட்டுப் பார்வையாளர்கள் இருவித மேடைத் தளங்களையும் கவனிக்கச் செய்ய வேண்டும்.)

ஒப்பனைக் காட்சி அறையிலிருந்து அய்யோ! அம்மா! என்னைய விட்டுடு... ஒன்னையக் கும்பிடுகிறேன். செண்பகம்! இனிமே இப்படி வம்பு செய்ய மாட்டேன். செண்பகத்தின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. நில்லுடா.... பொறுக்கி! நாயே ஓடாதேடா... டேய். எனக் குரல்கள் கேட்கின்றன. மேடையில் நிற்கும் அனைவரும் அக்குரல்களைக் கேட்டபடி அதிர்ந்து நிற்கும் வேளையில் சண்முகம் தப்பித்தோம், பிழைத்தோம் என மேடையில் ஓடிவந்து தட்டுத் தடுமாறி உயிர் பிழைத்தால் போதுமென தப்பித்துப் பார்வையாளர்களுக்குள் விழுந்து ஓடுகிறான். செண்பகம் (அல்லி) அவனைத் துரத்திக் கத்தியோடு மேடையில் ஓடி வருகிறாள். அனைத்துப் பெண்களும் பார்த்துத் திகைக்கின்றனர். அர்ச்சுனன் உயிர்பெற்று எழுந்து நிற்கிறான். அனைவரும் சேர்ந்து கிருஷ்ணனையும் அர்ச்சுனனையும் கோபப்பார்வை கொண்டு ஒருமித்துப் பார்க்கின்றனர். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் பயந்து ஒடுங்கி மேடையின் முன்புறம் நோக்கி அவர்களைப் பார்த்து நகர்ந்து வருகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அல்லி(வசனம்) :** டேய் பொறுக்கிகளா! பொம்பளைங்கள என்னடா நெனச்சீங்க! சாது மிரண்டால் காடு கொள்ளாது. ஒங்கள மாதிரிப்பயக இங்க மட்டுமில்லே எங்கேயுமே இருக்கக் கூடாது. (எனக்கத்தியைக் கொண்டு விளாசுகிறாள்.) அனைவரும் கூடி இருவரையும் மொத்துகின்றனர். தப்பித்துப் பார்வையாளர்களுக்குள் கிருஷ்ணனும் அர்ச்சுனனும் ஓடுகின்றனர். அனைத்துப் பெண்களும் பார்வையாளர் களுக்குள் ஓடிக் கொண்டிருக்கும் அவர்களை எரித்து விட்ட கோபப்பார்வையோடு கூர்மைப்படுத்திச் சேர்ந்து தோள் சேர்ந்து நிற்கின்றனர்)

**கோமாளி :** கிருஷ்ணன், அர்ச்சுனன் புராண காலத்திலே மட்டும் இல்லே இந்தக் காலத்திலேயும் நம்மகூட பேண்ட், சட்டை போட்டுக்கிட்டும், வேட்டி சட்டை போட்டுக்கிட்டும், கோட்டு டை கட்டிக்கிட்டும் கடைகள்ள, தெருவிலே, வீட்டிலே, நாட்டிலே ஒங்களோட, எங்களோட இன்னும் வாழ்ந்து கொண்டிருக்காங்க.

**ஆர்மோனியக்காரர் :** இந்த விதமாக கதை மங்கலமாக முடிந்தது.

மங்கலம் ஜெயமங்கலம்! மங்கலம் ஜெயமங்கலம்!

**சுபம் சுபம் சுபம்**

o


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நன்றி

இந்நாடகத்தை 'இந்தியா டுடே 2000'
இலக்கிய மலரில் வெளியிட்ட
எழுத்தாளர் வாசந்திக்கும்,
திரைப்படமாக எடுத்த
ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சான்
அவர்களுக்கும்...

o

இந்நாடகத்தை ஆசிரியர் அனுமதி பெற்று மேடை ஏற்றலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

கே.ஏ.ஜி. என்று பரவலாக அறியப்படும் முனைவர் கரு. அழ. குணசேகரன் (1955) நாட்டுப்புற இசை மற்றும் நிகழ்கலைகளைத் தமது கல்லூரி நாட்களிலிருந்தே மேடைக் கலையாக மாற்றியவர். மக்களுக்கான அரசியல் வடிவமாக அவற்றை மாற்றி அமைத்தவர். நாட்டார் வழக்காற்றியல் தொடங்கி அரங்கக்கலை வழியாக பல்வேறு ஆய்வுகளைச் செய்து வருகிறார். பெண்ணிய அரங்கியல், தலித் அரங்கியல் இவற்றை முன்னெடுத்துச் செல்லும் தேடல் கொண்டவர். தற்போது புதுவைப் பல்கலைக்கழக நாடகத்துறையில் தலைமைப் பொறுப்பில் இருக்கும் இவரின் 19வது நூல் இது. மரபுக்கும் புதுமைக்கும் இடையே உரையாடலாக அமைகிறது இந்நாடகம்.

அடையாளம்

ISBN 81 7720 004 6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்